373

MADRAS

பாப்பாத் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

373/4

★

ஆசிரியை :
V. S. லீலா, B.A., B.T.
பதிப்பாசிரியர் :
T. P. மீனாட்சிசுந்தரனார்,
M.A., B.L., M.O.L.

...ப்ளிகேஷன்ஸ் லிமிடெட்.,
...கம் பிள்ளை தெரு, சென்னை-5

TB.
031 (5)
N52
37722

பாப்பாத் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

ஆசிரியை :

V. S. லீலா B.A., B.T.

பதிப்பாசிரியர் :

T. P. மீனாட்சிசுந்தரனார் M.A., B.L., M.O.L.

அருணா பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்

2, வெங்கடரங்கம் பிள்ளை தெரு, சென்னை-5

பதிப்புரிமை]　　1952　　[விலை அணா 12

முதல் பதிப்பு—அக்டோபர் 1952

Kabeer Printing Works, Madras (2056)

முன்னுரை

'பாப்பாத் தமிழ் வாசகம்' என்னும் இந் நூல்-வரிசை, ஒன்று முதல் ஐந்து வகுப்புக்களுக்கு, அரசியலாரது பாடத்திட்டத்தைத் தழுவி எழுதப்பெற்றுள்ளது. தாய்மொழியாகத் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்கு உகந்த முறைகளை இவ்வரிசையில் காணலாம். குழந்தைகளின் மனத்தைக் கவருவதற்கு என்றே படங்கள் ஏராளமாகச் சேர்க்கப்பட்டுள்ளன. அவர்களுடைய 'சொற்களஞ்சியம்' விரிவடைவதற்குத் தகுந்த முறையில் பாடங்கள் அமைந்துள்ளன.

தமிழ் நாட்டுக் குழந்தைகள் இந் நூல்வரிசை வாயிலாகத் தமிழ்ச் சுவை பெறவேண்டும் என்பதே எமது அவா.

சென்னை,
1-10-52.

பதிப்பாசிரியர்

நன்றியுரை

இந் நூல்வரிசையில், தமது பாடல்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அன்புகூர்ந்து அனுமதி வழங்கிய பெரியார்களுக்கு எமது ஆழ்ந்த நன்றி உரியது.

பிரசுரகர்த்தர்

பொருள் அடக்கம்

எண்	பொருள்		பக்கம்
1.	தமிழ்	...	1
2.	கைத்திறன்	...	5
3.	அற்பம் அற்பம் அன்று	...	9
4.	வெள்ளப் பெருக்கு	...	14
5.	முத்து	...	17
6.	இராணி இலக்குமிபாய்	...	21
7.	மனிதக் குரங்கு	...	25
8.	அப்பம் திருடின எலி	...	30
9.	ஏழை பங்காளன்	...	33
10.	அது என்ன ?	...	37
11.	மாயக் குதிரை	...	41
12.	எல்லோரும் ஓர் குலம்	...	46
13.	கற்பகத் தரு	...	49
14.	நரியும் கிளியும்	...	52
15.	தெரியுமா ?	...	56
16.	செஞ்சி நகர்ச் சிறப்பு	...	60
17.	கவி இரவீந்திரர்	...	63
18.	ஜாவாச் சிறுவன்	...	67
19.	நரி பரியானது	...	72
20.	மலர்கள்	...	77
21.	விந்தை மனிதர்	...	79
22.	உலகம் பலவிதம்	...	83
23.	மூங்கில்	...	87
24.	எங்கள் பாட்டி	...	91
25.	அற்புத ஆட்சி	...	93
26.	மிளகாய்	...	97
27.	தந்தையை மீட்ட தனயன்	...	100
28.	வீரத் துறவி	...	105
29.	செய்யுள் பகுதி		
	1. மூதுரை	...	107
	2. நீதி வெண்பா	...	109
	3. நன்னெறி	...	111
	4. தனிப் பாடல்கள்	...	112

பாப்பாத் தமிழ் வாசகம்

ஐந்தாம் புத்தகம்

1. தமிழ்

1. கடவுளால் படைக்கப்பட்டுள்ள இந்தப் பரந்த பூவுலகின்கண் எண்ணற்ற ஜீவராசிகள் உள்ளன. புல் பூண்டு முதலான தாவர வகைகளும், புழு பூச்சி முதலான ஊர்ந்துசெல்லும் உயிர் இனங்களும், பறக்கும் புள்ளினங்களும், இன்னும் பல பிராணி வகைகளும், மனிதர்களும் இவ்வுலகில் வாழும் உயிர் வகைகள். இவற்றில் மனிதர்களே மேன்மையானவர்கள். ஏனெனில், தமக்குத் தோன்றும் கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவிக்கும் திறமை அவர்களுக்கே உண்டு. இதற்குப் பாஷை அல்லது மொழி பயன்படுகிறது.

2. இப்பூவுலகில் உள்ள நாடுகள் பல; அவற்றில் வாழும் மக்கள் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள்; அவர்கள் பேசும் மொழிகளும் வெவ்வேறு; அவர்களுடைய மதங்களும் வெவ்வேறு. சீனர் சீன மொழியிலும், ஜப்பானியர் ஜப்பானிய மொழியிலும் ஆங்கிலேயர் ஆங்கில மொழியிலும் பேசுகின்றனர். தமிழராகிய நாம் தமிழ் மொழியில் பேசுகிறோம்.

3. 'தமிழ்' என்றால் 'இனிமை' என்பது பொருள். தமிழ் மொழியைப் பேசுபவர் தமிழர்.

தமிழர் வாழும் நாடு **தமிழ் நாடு**. தமிழருடைய **தாய் மொழி தமிழ்**. நம் தாய் நமது குழந்தைப் பருவத்தில் நமக்குக் கற்றுக்கொடுத்த மொழி தமிழ் மொழி; ஆதலால், அதுவே நமது **தாய்மொழி**.

4. நமது தாய்நாடாகிய **பாரத** நாட்டில் வழங்கும் மொழிகள் பல. அவற்றுள் இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளி, உருது என்னும் மொழிகள் சில. தென்னாட்டில் தமிழ் பேசப்படுகிறது. தமிழ் மொழி பழமையான மொழி; அது தனிச் சிறப்பு வாய்ந்தது.

5. **சேரர், சோழர், பாண்டியர்** என்ற தமிழ் மன்னர் முற்காலத்தில் தமிழ் நாட்டை ஆண்டு வந்தனர். அவர்கள் தமிழ் மொழியைப் பெரிதும் ஆதரித்து வந்தார்கள். பாண்டியர் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டனர். அவர்களுடைய தலைநகரம் **மதுரை**; அந்நகரில் அவர்கள் **தமிழ்ச் சங்கம்** ஒன்றை அமைத்தனர். அச்சங்கத்தில் தமிழ்ப் புலவர்கள் பலர் ஒன்றுகூடிப் பல தமிழ்ப் பாடல்களையும் நூல்களையும் இயற்றினார்கள். பாண்டிய மன்னர்கள் புலவர்களுக்குப் பொன்னும் பொருளும் வழங்கி ஆதரித்தார்கள். சிறந்த தமிழ் நூல்கள் பல சங்க காலத்தில் இயற்றப்பட்டன.

6. தமிழ் மொழியில் பல அருமையான நூல்கள் உள்ளன. **திருவள்ளுவர்** எழுதிய **திருக்குறளும், கம்பர்** எழுதிய **இராமாயணமும்** சிரஞ்சீவி நூல்கள். இவை யாவும் செய்யுள் வடிவில் உள்ளன. பிற்காலத்தில் பல வசன நூல்களும் தோன்றலாயின. இவை தவிர, மற்றும் பல புலவர்கள் தமிழில் சிறந்த காவியங்களும், புராணங்களும் சிறு பிரபந்தங்களும் இயற்றியுள்ளனர். இப்பொழுது தமிழில் பல சிறந்த

நூல்கள் வெளியாகின்றன. இவற்றை நாம் படித்துப் பயன் அடையவேண்டும்.

7. தமிழ் நாட்டின் மொழிப் பெருமையைக் கூறும் கவிச் சக்கரவர்த்தி **சுப்பிரமணிய பாரதியார்**, உலகில் திருக்குறள் தலைசிறந்த நூல் எனக் கூறியுள்ளார். "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" எனப் பாமாலை பாடிப் புகழுரை வழங்கிய பாரதியாரைப் பின்பற்றி, நாமும் தமிழ் மொழியைச் செவ்வனே கற்று, தாய்நாட்டிற்குத் தொண்டு செய்யவேண்டும்.

கடவுள்	இனிமை	வசனம்
தாவரம்	அரும்பாடு	செவ்வனே
கருத்து	இயற்றி	ஜீவராசிகள்
மதம்	செய்யுள்	மொழி
வளர்ச்சி	புகழுரை	ஆதரித்து
புலவர்	எண்ணற்ற	சங்கம்
வடிவில்	புள்ளினம்	சிரஞ்சீவி
வான்புகழ்	பாஷை	தலைசிறந்த
படைத்தல்	பழமை	தொண்டு
உயிர்இனம்	அமைத்தனர்	பிரபந்தம்

பொருள் விளக்கம்

படைத்தல் - உண்டாக்குதல். எண்ணற்ற - எண்ணிக்கையில் அடங்காத. ஜீவராசிகள் - உயிர்வகைகள். இனம் - வகை. புள் - பறவை. அரும்பாடு - அதிகமான கஷ்டம். சிரஞ்சீவி - நெடுங்காலம் உயிர் வாழக்கூடிய. வடிவில் - உருவில். வான்புகழ் - ஆகாயத்தை அளாவும் புகழ். செவ்வனே - நன்றாக.

தெரிந்துகொள்

1. படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூவகைச் செயல்கள் உலகில் நிகழ்கின்றன. பிரம்மா,

விஷ்ணு, ருத்திரன் என்ற மூன்று உருவங்களில் இச்செயல்களைக் கடவுள் நடத்துகிறூர்.

2. செய்யுள் × வசனம்.
பழமை × புதுமை.

வினுக்கள்

1. உயிர் வகைகளில் மனிதர் எவ்வாறு மேன்மையானவர் ?
2. தமிழர் பேசும் மொழி யாது ?
3. தமிழ் எவ்வாறு நமது தாய்மொழி ஆகும் ?
4. தமிழை ஆதரித்த மன்னவர் யாவர் ?
5. தமிழில் சிரஞ்சீவி நூல்கள் எவை ?
6. சுப்பிரமணிய பாரதியார் என்பவர் யார் ?

பயிற்சி

1. புலவர், படைத்தல், புகழுரை, பெருமை—எதிர்ச்சொற்களை எழுது.

2. உயிரினம், அரும்பாடு, எண்ணற்ற, செவ்வனே, சிரஞ்சீவி, தலைசிறந்த—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. தமிழ் மொழியின் சிறப்பைப்பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

தமிழ் நமது தாய்மொழி. இம்மொழிக்கு இலக்கணம் உண்டு. இலக்கண வரம்புக்கு உட்பட்டு இம்மொழியில் பேசவும் எழுதவும் வேண்டும்; பிழையாகப் பேசுவதும் எழுதுவதும் தவறு. மொழியில் திருத்தமாகப் பேசவும் எழுதவும் இலக்கணம் உதவுகிறது. ஆதலால் தமிழ் இலக்கணத்தை நன்ருகக் கற்றுக்கொள்ள வேண்டும்.

2. கைத்திறன்

1. உலகின் பல பகுதிகளில் இயந்திரங்களின் இடைவிடாத ஓசையை நாம் இன்று கேட்கலாம். தொழிற்சாலேகளில் மின்சாரத்தின் உதவியால் அநேக தொழிலாளர் இயந்திரங்களே இயக்குகின்றனர். தரையில் விரைவாகச் செல்லும் மோட்டார்களும், கடலில் செல்லும் கப்பல்களும், வானத்தில் பறக்கும் விமானங்களும் இயந்திரங்களின் உதவியால் உருவாக்கப் படுகின்றன. இவையேயன்றி, அன்ருட வாழ்க்கைக்குத் தேவையான ஊசிகளும், குண்டூசிகளும், பொத்தான்களும் பல்லாயிரக் கணக்கில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

2. ஆயினும், நாட்டுப்புறங்களிலும் சிறு நகர்ப் புறங்களிலும் இன்றும் பல குடிசைத் தொழில்கள் நடைபெற்று வருகின்றன. இத்தொழிலாளிக்கு மின்சாரம் தேவையில்லே; இயந்திரங்கள் அவசியமில்லே. அவனுடைய கருவிகள் மிகவும் எளியவை; அவன் கைத்திறமையே அவனுடைய செல்வம். அவன் உற்பத்தி செய்யும் பொருள்கள் அவன் கைகளாலேயே செய்யப்பட்டவை ; ஆனல் அவை சிறந்தவை. பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்டுவரும் கருவிகளேக் கொண்டு அவன் நேர்த்தியான பொருள்களே உற்பத்தி செய்கிருன்.

3. இவ்வகைக் கைத்தொழில்களில் மண்பாண்டம் வனேதலும் ஒன்று. மண்பாண்டம் வனேதல் ஒரு பழமையான தொழில். ஆதிகால மனிதன் முதன் முதலில் கண்டுபிடித்த கைத்தொழில் இதுவாகத்தான் இருக்கவேண்டும். முதன் முதலில் மண்பாண்டங்கள் யாவும் கைகளாலேயே செய்யப்

பட்டுவந்தன. பின்பே சக்கரம் பயன்படுத்தப்பட்டது. முன்னாட்களில் எகிப்து நாட்டில் மிகவும் நேர்த்தியான பாண்டங்கள் வனையப்பட்டன; அவற்றுள் சித்திர வேலைப்பாடுகள் உள்ள சில பாண்டங்களை இப்பொழுது நாம் சில பொருட்காட்சிச் சாலைகளில் காணலாம்.

4. சைனாவில், கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மண்பாண்டங்கள் உருவாக்கப்பட்டன. ஒரு நேர்த்தியான மண் பாண்டத்தை நாம் உற்று நோக்குங்கால், அது சுட்ட களிமண்ணால் ஆக்கப்பட்டது என்று கண்டுபிடிக்க முடியாது. இப்பொழுது பல பாண்டங்கள் இயந்திரங்களின் உதவியால் உருவாக்கப்படுகின்றன; ஆயினும் பல குடிசைகளில் இன்னும் குயவனுடைய சக்கரம் சுழன்றுகொண்டே இருப்பதைக் காணலாம்.

5. நமது நாட்டில் ஏழைகளாகிய பெரும்பாலோர், மண்பாண்டங்களையே பயன்படுத்துகிறார்கள். முதலில் குயவன் களிமண்ணைப் பக்குவம் செய்கிறான். களிமண்ணிலிருந்து கற்களையும் பிற பொருள்களையும் அகற்றிவிட்டு, மண்ணை நன்றாக அழுத்தி மிதிக்கிறான். அதில் தண்ணீரை ஊற்றிச் சிறிது மணலைக் கலந்து பிசைந்து உருட்டி வைத்துக் கொள்கிறான். களிமண் உருண்டையைச் சக்கரத்தின்மேல் வைத்துச் சக்கரத்தைச் சுற்றுகிறான். சுழன்று கொண்டிருக்கும் மண் உருண்டையைக் கைகளால் உருவாக்கிப் பாண்டமாகச் செய்கிறான். இவ்வாறு பல உருவங்களைச் செய்து சூளையில் வைத்துச் சுட்டு, வெளியே எடுக்கிறான்.

6. குயவனின் கைத்திறனைப் பாருங்கள்! அவனுடைய சக்கரம் சுழல்வதைப் பார்ப்பது நமக்கு

மகிழ்ச்சியை உண்டாக்கும். அவன் செய்யும் சட்டி பானைகளும், கூஜாக்களும், குடங்களும், மூடிகளும், கலயங்களும், மற்றப் பொருள்களும் மலிவான விலையுள்ளவை; நேர்த்தியானவை.

7. பொங்கல் பண்டிகையன்று மண்பாண்டங்கள் அதிகமாக விற்பனையாகும். அன்று பொங்கல் இடுவதற்கு மண்பாண்டங்களையே யாவரும் வாங்குவார்கள். மண்பாண்டத்தில் சமையல் செய்து சாப்பிட்டால், உடலுக்கு ஆரோக்கியம் உண்டாகும் என்று சொல்லப்படுகிறது.

8. இதைத் தவிர நமது நாட்டில் வேறு பல குடிசைத் தொழில்களும் உண்டு. கூடை முடைதல், பாய் பின்னுதல், நூல் நூற்றல், ஆடை நெய்தல் முதலான தொழில்கள் மக்களுக்குப் பேருதவி புரிகின்றன. அவற்றைப் பேணி வளர்த்து, நமது நாட்டின் செல்வ நிலையைப் பெருக்குவது நமது கடமையாகும்.

பகுதி	முன்னாள்	பல்லாயிரம்
இயக்குதல்	பெரும்பாலோர்	பரம்பரை
குண்டூசி	விற்பனை	பொருட்காட்சிச்சாலை
ஆதிகாலம்	இடைவிடாத	சூளை
உருவாக்க	உற்பத்தி	பேணி
மகிழ்ச்சி	கைத்திறமை	மின்சாரம்
கடமை	வனைதல்	பொத்தான்
இயந்திரம்	பக்குவம்	கைத்திறன்
விமானம்	பேருதவி	செல்வநிலை
எளியவை	ஓசை	பெருக்குவது

பொருள் விளக்கம்

இயக்குதல் - இயங்கச் செய்தல். பல்லாயிரம் - பல ஆயிரம். பரம்பரை - வமிசம்.

வினுக்கள்

1. இயந்திர உதவியால் உற்பத்தியாகும் பொருள்கள் யாவை?

2. குடிசைத் தொழில்கள் எங்கு நடைபெறுகின்றன?

3. முன்னுளில் எந்த நாட்டினர் நேர்த்தியான மண் பாண்டங்கள் வனைந்தனர்?

4. சைனுவில் மண்பாண்டம் எப்பொழுது செய்யப் பட்டது?

5. மண்பாண்டங்கள் எவ்வாறு உருவாக்கப்படு கின்றன?

6. நமது நாட்டின் செல்வநிலையை எவ்வாறு பெருக்கலாம்?

பயிற்சி

1. முன்னுள், பெரும்பாலோர், உற்பத்தி, உருவம், நேர்த்தி—இவைகளுக்கு எதிர்ச்சொற்களை எழுது.

2. இடைவிடாத, எளியவை, பொருட்காட்சிச்சாலை, பேருதவி, செல்வநிலை, பக்குவம்—இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. மண்பாண்டம் தன் கதையைச் சொல்வதுபோல் ஐந்து வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

ஒவ்வொரு வாக்கியத்திலும் ஒரு கருத்து உண்டு. ஒரு கருத்தைப் பல வாக்கியங்களில் அமைத்தால், அந்த வாக்கியங்கள் யாவும் சேர்ந்து ஒரு **பாரா** அல்லது **பத்தி** எனப்படும். ஒவ்வொரு பத்தியும் ஒரு கருத்தை விவரிக்-கும் தன்மையுடையது.

இப் பாடத்திலுள்ள பத்திகள் ஒவ்வொன்றுக்கும் தலைப்பு கொடு.

3. அற்பம் அற்பம் அன்று

1. ஆப்பிரிக்கா தேசத்தில் ஓர் அடர்ந்த காடு இருக்கிறது. அக்காட்டில் எங்கும் வானளாவிய மரங்களும் செடி கொடிகளும் உள்ளன. கதிரவனுடைய கதிர்களை அவ்விருண்ட கானகத்தில் சில இடைவெளிகளில் மட்டும் காணலாம். அந்த இடைவெளிகளில் ஒருவகைக் காட்டு மனிதர் வாழ்கின்றனர். காட்டில் பலவகை மிருகங்களும் பறவைகளும் சுயேச்சையாக வாழ்கின்றன.

2. இரவு நேரங்களில் காடு முழுவதிலும் பலவித ஒலிகளைக் கேட்கலாம். அங்குள்ள நதிக்கரைகளில் பருத்த தவளைகள் கத்தும் சப்தமும், பறவைக் கூட்டங்களின் ஆரவாரமும், குரங்குகளின் கூக்குரலும், சிங்கத்தின் கர்ச்சனையும் காதுகளைச் செவிடாக்கும் தன்மையைக் கொண்டுள்ளன. அவ்வப்பொழுது அமைதியாகவும் இருக்கும்.

3. இங்கு வாழும் மனிதர்கள் இச்சப்தங்களுக்குப் பயப்படுவதில்லை; ஆனால் காட்டிற்குள் போவதற்கு மட்டும் அஞ்சுவர். இரவில் வீட்டை விட்டு வெளியேறும் மனிதர்களைப் பிசாசுகள் பிடித்துக்கொள்ளும் என்பது அவர்களுடைய எண்ணம். ஆதலால் இரவு நேரத்தில் அங்குள்ள ஜனங்கள் ஒன்று கூடுவார்கள். வயதில் முதிர்ந்தவர்கள் மற்றவர்களுக்குக் கதைகள் சொல்லுவர். ஒரு நாள் ஒரு பாட்டனர் சொன்ன கதை குழந்தைகளுக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. அது பின்வருமாறு :

4. முன்னொரு காலத்தில் அருகில் உள்ள அடவியில் ஒரு யானை வாழ்ந்து வந்தது. அதன் பெயர் கஜபதி. கஜபதியின் தூண்போன்ற கால்களும்,

முறம்போன்ற காதுகளும், பருத்து நீண்ட துதிக் கையும், வெண்மையான தந்தங்களும் அவற்றைப் பார்ப்பவர்க்கு அச்சம் உண்டாக்கும். அது நடந்து செல்லும்பொழுது ஒரு குன்று நகருவதுபோல் தோன்றும். கஜபதி கர்வம் மிகுந்த யானே. ஒரு நாள் காட்டுப் பாதையில் கஜபதி தன் துதிக்கையை ஆட்டிக்கொண்டு கர்வத்துடன் நடந்து சென்றது; வழியில் தரைமீது ஒரு பச்சோந்தியைப் பார்த்தது. "நிதானத்தின் சிகரமே! என் வழியை விட்டு விலகு" என்று கஜபதி பச்சோந்தியைப் பார்த்துச் சீறிற்று.

5. பச்சோந்தி மரியாதையுடன் அமைதியாக, "அவலட்சணக் குன்றே! உன்னிலும் நான் மெது வாகச் செல்கிறவன் அல்ல. நம் இருவரில் யார் நிதானம் என்று ஒரு பந்தயத்தின் மூலமாகச் சோதிக் கலாம். காட்டிலுள்ள மற்றப் பிராணிகள் பார்த்து உண்மையைத் தெரிந்து கொள்ளட்டும்" என்றது. "போடா! முட்டாள்! நாளேக்கே ஒரு பந்தயம் வைத்துக் கொள்ளலாம். எனக்குச் சம்மதம்" என்று கர்வமாகச் சொல்லிவிட்டு, உரக்கச் சிரித்துக் கொண்டே கஜபதி சென்றது. பச்சோந்தியும் சம் மதித்தது.

6. அன்று இரவு பச்சோந்தி தன் உடன்பிறந் தோர் தொண்ணூற்றென்பது பேருடன் கூடி ஆலோ-சனே செய்தது. இவை நூறும் ஒன்றைப் போலவே ஒன்று இருக்கும். "நாளேக்கு நீங்கள் ஒவ்வொரு வரும் பந்தயப் பாதைக்கு அருகில் சமதூரங்களில் ஒளிந்து கொள்ளுங்கள். கஜபதி வரும்பொழுது அதற்கு முந்தி ஓடுங்கள்; உங்களே அது கடந்து சென்றதும், மீண்டும் புதரில் மறைந்துகொள்ள

வேண்டும். ஒவ்வொருவரும் இவ்வாறே செய்ய வேண்டும்'' என்று பச்சோந்தி சொல்லிற்று.

7. பந்தய எல்லையில் ஒளிந்துகொள்ளும் சகோதரனை நோக்கி, ''யானை வருவதை நீ பார்த்துக் கொண்டே இரு. அதற்கு முன்னதாகவே நீ எல்லைக் கோட்டைத் தாண்டிவிடு'' என்று சொல்லிற்று. மறுநாள் காலை காட்டில் உள்ள மிருகங்கள் எல்லாம் பந்தயம் நடக்கும் இடத்தில் ஒன்று சேர்ந்தன. கஜபதியும் செருக்குடன் அசைந்து ஆடிக்கொண்டு வந்தது. பாவம்! அதற்குப் பச்சோந்தியின் உடன்பிறந்தார் பந்தயப் பாதையில் மறைந்துகொண்டு இருப்பது தெரியாது!

8. மிருகேந்திரன் பந்தயம் துவக்குவதற்குத் தயாராக நின்றது. காண்டா மிருகம் நடுநிலை வகித்து முடிவு எல்லைக்கோட்டிற்கு அருகில் அமர்ந்தது. கஜபதியும் பச்சோந்தியும் பந்தயக் கோட்டிலிருந்து புறப்பட்டன. விரைவில் கஜபதி பச்சோந்தியைக் கடந்து சென்றது. பந்தயத்தில் கெலித்ததாக அது மிகுந்த கர்வம் கொண்டது. ஆனால் தனக்கு முன்னால் பச்சோந்தி செல்வதைக் கஜபதி பார்த்தது! ''ஆச்சரியம்! அதைக் கடந்து இப்போது தானே வந்தேன்!'' என்று கஜபதி தனக்குள் சொல்லிக்கொண்டே, அதைக் கடந்து சென்றது. ஆனால் மீண்டும் முன்னால் பச்சோந்தியைப் பார்த்தது! கஜபதி தன் கண்களைக் கசக்கிக்கொண்டு கருத்துடன் சென்றது. ஆயினும், முடிவு எல்லைக் கோட்டுக்கு அருகில் சென்றதும், பச்சோந்தி எல்லைக் கோட்டைக் கடப்பதை யானை பார்த்தது! பச்சோந்தி வெற்றி அடைந்தது என்று காண்டாமிருகம் தெரிவித்தது.

9. யானை அவமானம் அடைந்தது. பச்சோந்தி தன் உடன்பிறந்தோரைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. பச்சோந்திக் குடும்பத்தில் அன்று பெருமகிழ்ச்சி காணப்பட்டது. அதுமுதல் ஒரு யானையும் பச்சோந்தியைச் துச்சமாகப் பேசுவதில்லை. "அற்பம் அற்பம் அன்று" என்ற உண்மையை யானை உணர்ந்தது.

அடர்ந்த	சீறிற்று	ஆச்சரியம்
சுயேச்சை	சம்மதம்	துச்சம்
அமைதி	துவக்க	இடைவெளி
அடவி	கெலித்ததாக	அவ்வப்பொழுது
குன்று	பெருமகிழ்ச்சி	அச்சம்
சமதூரம்	வானளாவிய	நிதானம்
எல்லைக்கோடு	கூக்குரல்	அவலட்சணம்
அமர்ந்தது	பிசாசு	ஆலோசனை
அவமானம்	தந்தம்	சகோதரன்
கானகம்	சிகரம்	நடுநிலை
ஆரவாரம்	மரியாதை	வெற்றி
அஞ்சுவர்	உடன்பிறந்தோர்	அற்பம்
செருக்கு	கடந்து	

பொருள் விளக்கம்

கானகம் - காடு. ஆரவாரம் - கூச்சல். அடவி - காடு. சிகரம் - உச்சி. அவலட்சணம் - விகாரம். துச்சம் - இழிவு. செருக்கு - கர்வம். பந்தயம் - போட்டி.

தெரிந்துகொள்

அவமானம் × மானம். அமைதி × ஆரவாரம்.

வினாக்கள்

1. ஆப்பிரிக்காவில் காட்டு மனிதர்கள் எங்கு வசிக்கின்றனர்?
2. அவர்கள் இரவில் என்ன செய்வார்கள்?
3. கஜபதி பச்சோந்தியைப் பார்த்து என்ன சொல்லிற்று?
4. பந்தயத்தில் வெற்றி அடைந்தது யார்? எவ்வாறு?
5. யானை இதனால் அறிந்த உண்மை யாது?

பயிற்சி

1. அச்சம், நிதானம், அவலட்சணம், ஒளிந்து, விலகு—எதிர்ச்சொற்கள் எழுதுக.
2. ஆரவாரம், சுயேச்சை, அமைதி, கூக்குரல், அவமானம், அற்பம்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
3. யானை தன் தோல்வியைப் பற்றி நண்பனிடம் சொல்வதுபோல் எழுது.

இலக்கணம்

யானை பச்சோந்தியைப் பார்த்தது. இதில் **யானை** எழுவாய்; **பார்த்தது** பயனிலை; **பச்சோந்தி** செயப்படுபொருள். பயனிலையுடன் எதை அல்லது யாரை என்று சேர்த்து வினவினால், வரும் விடை **செயப்படுபொருள்** ஆகும்.

4. வெள்ளப் பெருக்கு

வெள்ளப் பெருக்கினைப் பார்க்கையிலும் அதன்
வேகத்தின் சத்தத்தைக் கேட்கையிலும்
உள்ளம் திகைத்தொரு உண்மை அறிவினை
ஊட்டுது தெய்வத்தைக் காட்டுது பார்! (1)

காடும் மலையும் கிடுகிடுக்க அந்தக்
காட்டு மிருகங்கள் ஓட்டமிட
ஓடும் நதியிலே அத்தனைத் தண்ணீரை
ஊற்றுவதார்? என்ற மாற்றம் வரும். (2)

நேற்று நடந்திட்ட மக்களின் பாதங்கள்
நீற்று நெருப்பெழக் கொப்புளித்த
ஆற்றிலே இன்றைக்கு அத்தனை தண்ணீர்
அப்படி வந்ததும் எப்படியோ! (3)

நீரின்றி மக்கள் நிலையுமுண்டோ ? அந்த
நீரைத் தருவதும் ஆறல்லவோ ?
ஆறென்ற நீருக்கும் மேகங்கள் ஆதாரம்
ஆகாயம் மேகத்துக் காதரவு. (4)

அன்னம் அளிப்பவள் காவேரி, நல்ல
ஆடை கொடுப்பவள் காவேரி.
இன்னும் மனிதர்க்கு வேண்டிய இன்பங்கள்
யாவையும் காவேரியே தருவாள். (5)

தாய்மொழி தெய்வத் தமிழ்மொழியாம் அதைத்
தந்த அகத்திய மாமுனிவன்
தூய்மைக் கமண்டல நீரென்று காவேரிச்
சுத்தத்தைச் சொல்லித் துதித்திடுவார். (6)

யாருக்கு எப்படி ஆனாலும் இந்த
ஆற்றங்கரையில் வசிக்குமெங்கள்
ஏருக்கு நீர்தந்து யாருக்கும் சோறூட்டும்
எங்கள் குலதெய்வம் காவேரி. (7)

—நாமக்கல் கவிஞர்

பெருக்கு	சத்தம்	உள்ளம்
திகைத்து	தெய்வம்	கிடுகிடுக்க
மாற்றம்	கொப்புளித்த	துதித்து
நிலை	அல்லவோ	ஆதாரம்
அன்னம்	இன்பம்	மாமுனி
தூய்மை	கமண்டலம்	குலதெய்வம்
அளிப்பவன்	இன்றி	இன்றை

பொருள் விளக்கம்

மாற்றம் - சொல். அன்னம் - சோறு. தூய்மை - பரிசுத்தம். கமண்டலம் - கரகம்.

வினுக்கள்

1. வெள்ளப் பெருக்கினுல் நாம் அறியக்கூடிய உண்மை யாது?

2. தண்ணீரின் பயன் யாது?

3. காவேரி எவ்வாறு குலதெய்வம் ஆவாள்?

பயிற்சி

1. கிடுகிடுக்க, குலதெய்வம், ஆதாரம், ஆதரவு, தூய்மை - இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பிரித்து எழுது :— தமிழ்மொழி, சோறூட்டும், குலதெய்வம்.

இலக்கணம்

பின்கண்ட வாக்கியங்களில் எழுவாய்களையும் பயனிலைகளையும் செயப்படு பொருள்களையும் எடுத்து எழுது :

1. வேலன் ஆற்று வெள்ளத்தைப் பார்த்தான்.
2. ஆறு தண்ணீர் கொடுக்கின்றது.
3. மேகம் மழையைக் கொடுக்கிறது.
4. அகத்தியன் தமிழ்மொழியை அளித்தான்.
5. காவேரி அன்னம் அளிக்கிருள்.



5. முத்து

1. நவரத்தினங்களில் நானும் ஒருவன். என் நிறம் வெண்மை. நான் ஒளி வீசும் தன்மையன். என்னை மங்கையர் விரும்பி மாலையாகவும் பிற பணி களாகவும் தொடுத்து அணிவர். மன்னரின் மகுடத் தில் நான் பெருமையுடன் இருப்பேன்.

2. என் பிறப்பு விநோதமானது. முத்துச் சிப்பியின் உள்ளே நான் இருப்பேன். கடற்கரை யிலும் ஆறுகளிலும் கிளிஞ்சல்கள் காணப்படும். இரு கிளிஞ்சல்கள் ஒன்றன்மீது ஒன்று பொருந்தி இருப்பதே சிப்பி எனப்படும். இச்சிப்பியின் உட் புறத்தில் ஒரு பூச்சி இருக்கும். சிப்பிக்குள் மணல் நுழைந்துவிட்டால், பூச்சி வெளிவர இயலாது. அப் பொழுது அது சிப்பியினுள்ளே சுற்றிச் சுற்றிப் புர- ளும். அவ்வாறு அது புரளும்போது ஒரு வகையான திரவம் தோன்றும். அத்திரவம் மணலுடன் கலந்து இறுகும். அவ்விதம் இறுகின பொருள்தான்

நான். நான் இறுகுவதற்குச் சுமார் ஐந்தாண்டுகள் ஆகும்.

3. சிப்பியே என் வீடு. என் மனையைப் போன்ற பல மனைகள் கடலினுள்ளே உண்டு. கடலுக்குள் ஆழம் உள்ள இடங்களில் நூறு அடிக்குள் எங்களுடைய வீடுகள் இருக்கும். மனிதர்கள் எங்களை அங்கே விட்டு வைக்கமாட்டார்கள்; படகுகளில் சென்று கடலுக்குள் மூழ்கி எங்களை வெளியே எடுப்பார்கள். இதை **முத்துக் குளித்தல்** எனச் சொல்லுவர். முற்காலத்தில் முத்துக் குளிப்பது வெகு கடினம். நீரினுள்ளே நீண்ட நேரம் மூச்சை அடக்கும் திறமை உள்ளவர்களே இத்தொழிலைச் செய்வர். முத்துக்குளிப்பவர் ஒரு காலில் கனத்த கருங்கல்லை உறுதியான கயிற்றினால் கட்டிக்கொள்வர்; மற்றொரு காலில் சிப்பிகளைப் பிடிக்கும் வலையையும் கட்டிக்கொண்டு கடலுக்குள் மூழ்குவர். தண்ணீரின் உள்ளே தரைமட்டத்திற்குச் சென்றதும் காலில் உள்ள வலையைக் கழற்றிக் கழுத்தில் மாட்டிக் கொண்டு, அதில் எங்களை வாரிப் போடுவர். நீருக்குள் மூச்சை அடக்கிக் கொண்டு இருப்பர். மூச்சை அடக்கமுடியாத நிலையில் காலில் உள்ள கல்லை அவிழ்த்து விடுவர். அவர்களைப் படகுகளில் சிலர் கயிற்றினால் பிணைத்துக் கொண்டிருப்பர். அக் கயிறுகளை அவர்கள் பற்றிக்கொண்டு நீர் மட்டத்திற்கு வருவர்.

4. இக்காலத்தில் இவ்வளவு கஷ்டம் இல்லை. நீரில் மூழ்குவோர் இரப்பரால் (Rubber) ஆக்கப்பட்ட சட்டைகளை அணிந்துகொண்டும், நீரினுள் மூச்சு விடுவதற்குத் தேவையான இயந்திரங்களின் உதவியாலும் எங்களை எடுக்கிறார்கள்.

5. நாங்கள் கடலிலிருந்து வெளி வந்ததும், எங்களைப் பூமிக்குள் புதைத்து வைப்பார்கள். அம்மம்ம! கடலில் நீருக்குள் அழுந்திக் கிடந்தோம்; விடுதலை கிடைத்தது என்று மகிழ்ந்தோம்! ஆனால் மீண்டும் நிலவறையில் சிறை வாசம்! அதுமட்டு மன்று. ஒரு வாரத்திற்குப் பின்பு கொதிக்கும் நீரில் எங்களைப் போட்டுச் சுத்தம் செய்வார்கள்; பின்பு சிப்பிகளை அறுத்து எங்களை எடுப்பார்கள். எங்களில் சிலர் சிறியவராகவும், சிலர் பருத்தும் இருப்போம். எங்களை வியாபாரிகள் மொய்த்துக் கொள்வர்; ஏலத்தில் எங்களை விலைக்கு வாங்கிக் கொள்வர். பின்பு நாங்கள் மங்கையர்க்கும் ஆடவர்க்கும் பயன்படுகிறோம்.

6. நாங்கள் உண்டாவதைப்பற்றி முற்காலத்திய வரலாறு ஒன்று உண்டு. மழை பெய்யும்போது சிப்பிகள் நீர் மட்டத்திற்கு மேலே வரும்; அப்பொழுது மேல் ஓடுகள் திறந்திருக்கும்; அதனால் மழைத்துளி சிப்பியினுள்ளே புகும். அம் மழைத்துளிகளே நாங்கள் என்று எங்கள் பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன். நாங்கள் சிங்களத்திற்கு அருகிலுள்ள கடலிலும், தூத்துக்குடிக்கு அருகிலும் வாழ்கிறோம்.

நவரத்தினம்	ஆடவர்	கழற்றி
மகுடம்	மங்கையர்	நிலவறை
திரவம்	கிளிஞ்சல்	நீர்மட்டம்
கடினம்	மனை	அணிவர்
பிணைத்து	உறுதி	புரளும்
தன்மை	புதைத்து	மூழ்கி
விநோதம்	வரலாறு	அவிழ்த்து
இறுகும்	சிப்பி	மொய்த்து
கனத்த	ஆழம்	பருத்து

பொருள் விளக்கம்

மகுடம் - கிரீடம். திரவம் - நீர்ப்பொருள். பிணைத்து - சேர்த்து. இறுகும் - கடினமாகும். ஆடவர் - ஆண்கள். மனை - வீடு.

தெரிந்துகொள்

முத்துச்சிப்பி—முத்து + சிப்பி. ஐந்தாண்டு—ஐந்து + ஆண்டு. நீர்மட்டம்—நீர் + மட்டம்.

வினாக்கள்

1. முத்து எவ்வாறு உண்டாகிறது ?
2. முத்துக்குளிப்பது எப்படி ?
3. இப்பொழுது எப்படி எளிதில் முத்துக்குளிக்கின்றனர் ?

பயிற்சி

1. முத்துக்கள் எவ்வாறு பயன்படுகின்றன ?
2. கனத்த, திரவம், கடினம், அவிழ்த்தல், பிறப்பு— எதிர்ச்சொற்களை எழுது.
3. பிரித்து எழுது :—முத்துச்சிப்பி, முத்துக்குளித்தல், கருங்கல், தரைமட்டம், நிலவறை.

இலக்கணம்

ஒரு வாக்கியத்தின் எழுவாயைச் செயப்படுபொருளாகவும், செயப்படுபொருளை எழுவாயாகவும் மாற்றி எழுதலாம்.

(உ - ம்) கமலா முத்துமாலை அணிந்தாள். இதில் முத்துமாலை செயப்படுபொருள் ; கமலா எழுவாய். முத்துமாலையை எழுவாயாக மாற்றினால் வாக்கியம் "முத்துமாலை கமலாவினால் அணியப்பட்டது" என்று மாறும் ; ஆனால் கருத்தில் மாறுதல் இல்லை.

பின்வரும் வாக்கியங்களில் செயப்படுபொருள்களை எழுவாய்களாக மாற்றி அமைக்க :

1. செம்படவன் மீன் பிடிக்கிறான்.
2. வியாபாரி முத்து விற்கிறான்.
3. கந்தன் கிளிஞ்சல் பொறுக்கினான்.
4. மரகதம் முத்துமாலையை வாங்கினாள்.
5. முத்துக்குளிப்பவர் கருங்கல்லைக் கட்டிக்கொள்வார்கள்.

6. இராணி இலக்குமிபாய்

1. நமது பாரத நாடு இன்று விடுதலை அடைந்துள்ளது. நமது நாட்டை விட்டு அந்நியர் ஆட்சி ஒழிந்தது. ஆனால் விடுதலை பெறுவதற்குப் பல ஆண்டுகள் நாம் கஷ்டப்பட்டோம். மகாத்மா காந்தி நம் தலைவராக இருந்து விடுதலையை நமக்கு அளித்தார். ஆனால் இதற்கு முன்பும், பலர் நாட்டு விடுதலைக்கு முயன்றனர். அவர்களில் **இராணி இலக்குமிபாயும்** ஒருவர் ஆவர்.

2. பாரத நாட்டில் **பிரயாகை** என்றொரு புண்ணிய நகரம் உள்ளது. அதற்கு அருகில் **ஜான்ஸி** என்றொரு நாடு இருக்கிறது. ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்கு முன் அந்நாட்டை **ராஜா கங்காதர ராவ்** என்பவர் ஆண்டுவந்தார். **இலக்குமிபாய்** அவருடைய மனைவி.

3. கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து நாட்டை ஆண்டு வந்தனர். ஆனால் கங்காதரராவ் சில ஆண்டுகளிலேயே இறந்து போனார். அதுவரை இலக்குமிபாயிக்குக் குழந்தை இல்லை. கணவன் இறந்ததும் **தாமோதரன்** என்ற சிறுவனை இலக்குமி பாய் மைந்தனாக சுவீகாரம் செய்து கொண்டார்.

4. அப்பொழுது நமது நாட்டில் ஆங்கிலேயருடைய அதிகாரம் மேலோங்கி இருந்தது. இலக்குமிபாய் செய்து கொண்ட சுவீகாரத்தை அவர்கள் ஏற்கவில்லை. ஆதலால், ஜான்ஸி நாட்டைக் கைப்பற்ற ஒரு போர்ப் படையை ஆங்கிலேயர் அனுப்பினர். இலக்குமிபாயின் தலைமையில் ஜான்ஸி மக்கள் திரண்டு எழுந்தனர்.

5. ஆங்கிலேயர் ஜான்ஸிக் கோட்டையை முற்றுகை இட்டனர் ; ஓய்வு இல்லாமல் பீரங்கிகளால் அக்கோட்டையைத் தாக்கினர். இராணியின் படை வீரரும் ஆங்கிலேயரைப் பீரங்கிகளைக் கொண்டு சுட்டனர். ஆங்கிலேயர் தோல்வி அடைந்தனர் ; கோட்டைக்குள் அவர்களால் செல்லமுடியவில்லை. ஆயினும் மீண்டும் கடும்போர் புரிந்தனர். இரத்த வெள்ளம் கரைபுரண்டு ஓடிற்று. இராணியே தலைமை தாங்கிப் போரை நடத்தினர். ஜான்ஸி வீரரில் சிலர் நாட்டுக்குத் துரோகம் செய்து ஆங்கிலேயரைக் கோட்டைக்குள்ளே வரச் செய்தனர். இனி வெற்றி பெற முடியாது என்று இராணி கருதித் தம் மைந்தனுடன் நகரைவிட்டு நீங்கினாள்.

6. நகரை விட்டுச் சென்ற இராணி குவாலியர் கோட்டையை அடைந்தாள். ஆங்கிலப் படையினர் அக் கோட்டையையும் முற்றுகை இட்டனர். அவருடைய தோழியர் இருவரும் அப் போரில் மாண்டனர். மிகுந்த வீரருடன் இராணி தப்பிச்செல்ல முயன்றாள். செல்லும் வழியில் ஒரு வாய்க்கால் இருந்தது ; குதிரையால் அதைத் தாண்ட முடியவில்லை ; பகைவர் அதற்குள் அரசியைச் சூழ்ந்து கொண்டனர். பின்புறமிருந்து ஒருவன் இராணியின்மேல் வாளை வீசினான் ; அவனை அரசி உடனே வெட்டி வீழ்த்தினாள். கடும் போர் புரிந்ததால், இராணி களைப்புற்றுக் குதிரையின் மேல் சாய்ந்தாள். ஒரு வீரன் அவரை அருகிலிருந்த குடிசைக்குக் கொண்டு சென்றான். அங்கு அரசி இறைவன் அடி சேர்ந்தாள்.

7. தமது நாட்டின் சுதந்தரத்தைக் காப்பாற்ற இலக்குமிபாய் தம் உயிரையே கொடுத்தார். அவர் இறந்து போனாலும், அவருடைய புகழ் இன்றும்

நின்று நிலவுகிறது. இலக்குமிபாயைப் போலவே நாமும் நமது நாட்டின்மேல் பற்றுள்ளவராக வாழ வேண்டும்.

8. இலக்குமிபாய் அரசாண்ட நாளில் அதிகாலையில் எழுந்து நீராடுவார்; வெண்ணிற ஆடைகளை அணிவார்; பின்பு இறைவனை வணங்குவார்; கொலுவிருந்து நாட்டிற்கு நன்மையான காரியங்களைச் செய்வார்; நண்பகலில் உணவு அருந்துவார். அவர் அறிவுமிகுந்தவர்; நீதிநெறி பிசகாதவர். ஏழை எளியவர்க்கு அவர் செய்த நன்மைகள் பல; மக்கள் அவருடைய ஆட்சியில் மகிழ்வுடன் வாழ்ந்தனர்.

விடுதலை	ஆட்சி	இறைவனடி
ஒருமித்து	மைந்தன்	அதிகாரம்
ஏற்கவில்லை	போர்ப்படை	கோட்டை
ஓய்வு	இட்டனர்	தோல்வி
கரைபுரண்டு	துரோகம்	மாண்டனர்
அரசி	களைப்பு	நீதிநெறி
அந்நியர்	அகன்றது	மேலோங்கி
கணவன்	சுவீகாரம்	முற்றுகை
கைப்பற்ற	திரண்டு	கடும்போர்
பீரங்கி	தாக்கினர்	பகைவர்
சூழ்ந்து	தோழியர்	நண்பகல்

பொருள் விளக்கம்

ஒருமித்து - ஒன்று சேர்ந்து. நண்பகல் - நடுப்பகல்.

வினாக்கள்

1. நமது நாட்டிற்கு விடுதலை அளித்தவர் யார்?
2. ஜான்ஸி நாட்டின்மேல் ஏன் ஆங்கிலேயர் படையெடுத்தனர்?
3. இலக்குமிபாய் ஜான்ஸிக் கோட்டையை விட்டு ஏன் நீங்கினர்?

4. இலக்குமிபாய் எவ்வாறு இறைவனடி சேர்ந்தார் ?

5. இலக்குமிபாய் எவ்வாறு அரசு புரிந்தார் ?

பயிற்சி

1. நீதிநெறி, ஏழை எளியவர், துரோகம், நண்பகல், இறைவனடி—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. மதுரையை ஆண்ட இராணி மங்கம்மாளைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

1. இலக்குமிபாய் போர் செய்தார்—இலக்குமிபாய் போர் செய்யவில்லை.

2. இராணி தப்பிச் சென்றாள்—இராணி தப்பிச் செல்லவில்லை.

3. மக்கள் திரண்டு எழுந்தனர்—மக்கள் திரண்டு எழவில்லை.

மேலே உள்ள வாக்கியங்களில் முதலில் உள்ளவற்றில் காணப்படும் வினைமுற்றுக்கள் தொழில் நிகழ்ந்ததைக் குறிக்கின்றன ; மற்றவை தொழில் நிகழாமையைக் குறிக்கின்றன. முதலில் உள்ளவற்றை உடன்பாடு என்றும், பிந்தியவற்றை எதிர்மறை என்றும் சொல்வர்.

கீழ்வரும் வாக்கியங்களை எதிர்மறை வாக்கியங்களாக மாற்றி எழுது :

1. இலக்குமிபாய் தெய்வபக்தி உள்ளவர்.
2. அரசி நகரைவிட்டு நீங்கினாள்.
3. ஆங்கிலேயர் ஜான்ஸியைக் கைப்பற்றினர்.
4. இராணி தலைமை தாங்கினாள்.
5. நாட்டினின்று அந்நியர் அகன்றனர்.

7. மனிதக் குரங்குகள்

1. உலகில் வாழும் பல உயிர் வகைகளில் ஏறக் குறைய மனிதனைப்போல இருப்பது குரங்கு ஆகும். குரங்குகளுள் பலவகை உண்டு. அவற்றில் மிகப் பெரியது வாலில்லாக் குரங்கு. அவைகளுக்கு வால் இல்லை; நம்மைப் போல் கைகள் உண்டு; நமக்கு இருப்பதைப் போல் அதே எண்ணிக்கை உள்ள பெரிய பற்கள் உண்டு; நம்மைப் போல் எலும்புகளும் மூளையும் உண்டு. வாலில்லாக் குரங்குகளில் பலவகை உண்டு. கொரில்லா, சிம்பன்ஸீ, உரான்-உட்டன் என்பவை சிலவகைகள்.

2. இவைகளில் மிகவும் பெரியது கொரில்லா. இது ஆப்பிரிக்காவிலுள்ள அடர்ந்த காடுகளில் காணப்படுகிறது. இது ஐந்து அல்லது ஆறு அடி உயரம் இருக்கும்; உடலில் ரோமம் அடர்த்தியாக இருக்கும்; இதன் தலை பெரியது; கைகள் முழங்கால்

வரையில் நீண்டு தொங்கும். இதன் கால்விரல்கள் கைவிரல்களைப் போன்று இருக்கும். ஆதலால், அது தன் கால்களால் நடப்பதோடு அல்லாமல், அவற்றால் பொருள்களையும் பற்றிக்கொள்ளும். தன் கால்களால் கொரில்லாவினால் நேராக நிற்க முடியாது; நிற்கும்போது மரக்கிளையைப் பற்றிக்கொண்டு நிற்கும்.

3. கொரில்லா தரையிலிருந்து இருபது அடி உயரத்தில் மரங்களில் வசிக்கும். அவை கூட்டங் கூட்டமாக வாழும். மனித உணர்ச்சிகள் பலவும்

கொரில்லாவுக்கு உண்டு. அது மகிழ்ச்சி அடைந்தால் சிரிக்கும்; துக்கம் மிகுந்தால் அழும்; சினம் கொண்டால் அதன் முகம் சிவப்பு நிறம் அடையும்; அப்பொழுது தரையில் காலைத் தேய்த்துப் பல்லைக் காட்டி இளிக்கும். தனக்கு ஆபத்து நேர்ந்தால் மட்டும், அது மனிதன் மேல் பாயும்.

4. ஒரு முறை, ஒரு மனிதன், ஒரு கொரில்லாவைக் குறிபார்த்துச் சுட்டான். அவன் குறி தவறிவிட்டது. கொரில்லா அவன்மேல் பாய்ந்து, அவன் துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டது. பின்பு அத் துப்பாக்கியைப் பற்களிடையே வைத்துக் கடித்து

வளைத்தது ; உடனே அந்த மனிதன்மேல் பாய்ந்து அவன் கையைக் கடித்துத் துண்டித்து விட்டது !

5. **டாக்டர் லிவிங்ஸ்டன்** என்ற பெரியார் ஒரு சிம்பன்ஸீயை வளர்த்து வந்தார். அது அவரிடம் பேரன்பு கொண்டிருந்தது; அவருடன் உலவச் செல்ல அதற்கு வெகு பிரியம் ; அழைத்துக்கொண்டு செல்லாவிட்டால் அது குழந்தைபோல் அழும். ஒரு முறை ஓர் ஆங்கிலேயர் ஒரு சிம்பன்ஸீயுடன் ஆப்பிரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். கப்பலில் பிரயாணம் செய்த யாவரும் அதனிடம் அன்பாக இருந்தனர்; பிரயாணிகளுடன் உட்கார்ந்து அது உணவு அருந்தும். ஒரு நாள் கப்பல் ஒரு துறைமுகத்தில் நின்றது. அங்கு ஒரு கனவானும் அவருடைய மனைவியும் ஒரு குழந்தையுடன் கப்பலில் ஏறினர். பிரயாணிகள் அக் குழந்தையைக் கொஞ்சத் தொடங்கினர். தன்னைப் பிரயாணிகள் விரும்பவில்லை என்று சிம்பன்ஸீ நினைத்து, அன்று முதல் துக்கம் அடைந்தது.

6. ஒரு நாள் உணவு அருந்தும்பொழுது அக் குரங்கு காணப்படவில்லை. அதன் எஜமானர் அதைக் காணக் கப்பல் தளத்திற்குச் சென்றார். அங்கே அக் குரங்கு குழந்தையைக் கடலில் வீசி எறிவதற்குத் தயாராக இருந்ததைக் கண்டார்! எசமானனைக் கண்டவுடன், அது குழந்தையைக் கீழே வைத்து விட்டு ஓடிப்போயிற்று !

7. ஒரு மிருகக் காட்சிச்சாலையில் ஒரு உரான்-உட்டன் இருந்தது. காட்சிச்சாலைக் காவலனிடம் அது வெகு பிரியமாக இருந்தது. ஒரு நாள் சிலர் அங்கே வந்தனர். அதன் விளையாட்டுக்களைக் கண்டு அவர்கள் களித்தனர். திடீரென்று அது அங்கிருந்த

சாளரத்தின் மேல் ஏறிக்கொண்டு வெளியே பார்த்தது. காவலன் அதைக் கூப்பிட்டான். அவன் அழைப்பை அது ஏற்கவில்லை. காவலன் சினம் கொள்வதுபோல் பாவனை செய்தான். குரங்கு உடனே வருத்தப்பட்டு, சாளரத்திலிருந்து கீழே குதித்துச் சென்று, காவலனைக் கட்டிக் கொண்டு முத்தம் அளித்தது! சிம்பன்ஸீயை இளமையிலிருந்தே வளர்த்தால், மனிதரிடம் அது நேசமாக இருக்கும் குணம் படைத்தது.

8. குரங்குகள் சாகபட்சணி வகையைச் சேர்ந்தவை. அவை மரங்களிலுள்ள பழங்களைப் பறித்துத் தின்னும்.

எண்ணிக்கை	துப்பாக்கி	கனவான்
அடர்த்தி	துறைமுகம்	களித்தனர்
இளிக்கும்	காவலன்	ரோமம்
பிரயாணி	வருத்தம்	சினம்
தளம்	சாகபட்சணி	பேரன்பு
பாவனை	மூளை	கொஞ்சுதல்
குணம்	உணர்ச்சி	அழைப்பு
எலும்பு	துண்டித்து	நேசம்

பொருள் விளக்கம்

பாவனை - நடிப்பு. சாகபட்சணி - இலை உணவு கொள்ளும் உயிர்கள். துண்டித்து – வெட்டி. ரோமம் – மயிர். நேசம் - நட்பு.

தெரிந்துகொள்

சாகபட்சணி × மாமிசபட்சணி. பாவனை × உண்மை.

வினாக்கள்

1. வாலில்லாக் குரங்குகளில் சில வகைகள் எவை?
2. கொரில்லாவின் அமைப்பு எவ்வாறு இருக்கும்?
3. கொரில்லாவுக்குள்ள உணர்ச்சிகள் யாவை?
4. தன்னைப் பார்த்துச் சுட்ட மனிதனைக் கொரில்லா என்ன செய்தது?
5. கப்பலில் பிரயாணம் செய்த சிம்பன்ஸீ ஏன் குழந்தையை வெறுத்தது?

6. உரான்-உட்டன் காட்சிச்சாலைக் காவலனுக்கு ஏன் முத்தம் அளித்தது?

7. குரங்குகளின் உணவு என்ன?

பயிற்சி

1. எண்ணிக்கை, சாகபட்சணி, பாவனை, பேரன்பு, சினம், கனவான்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இளமை, திடீரென்று, ஏற்கவில்லை, எசமானன் இவற்றிற்கு எதிர்ச்சொற்களை எழுது.

3. ஒரு குரங்காட்டி குரங்கை என்ன செய்கிறுன் என்பதை ஐந்து வாக்கியங்களில் எழுது.

இலக்கணம்

1. இப் பாடத்தில் முதல் பத்தியில் உள்ள பெயர்ச் சொற்களையும் வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

2. இரண்டாம் பத்தியிலுள்ள வினைமுற்றுக்களை எழுது.

3. நான்காம் பத்தியில் வந்துள்ள எழுவாய்களையும் பயனிலைகளையும் செயப்படுபொருள்களையும் எழுது.

திணை - பால்

(1) திணை என்ருல் குலம் என்பது பொருள். திணை இருவகைப்படும்—உயர்திணை, அஃறிணை.

மக்கள், தேவர்-உயர்திணை. மற்றவை அஃறிணை.
மனிதர், மாலுமி, சிறுமி—உயர்திணை.
கடல், காடு, குரங்கு—அஃறிணை.

(2) பால் என்ருல் பிரிவு என்பது பொருள். உயர் திணையில் மூன்று பிரிவுகள் உண்டு. அவை (1) ஆண் பால் (2) பெண்பால் (3) பலர்பால் என்பவை. அஃறிணையில் (1) ஒன்றன் பால் (2) பலவின் பால் என இரு பிரிவுகள் உள்ளன.

மாதவன், எசமானன், தலைவன்—ஆண்பால்.
கமலம், எசமானி, தலைவி—பெண்பால்.
வீரர், மக்கள், மன்னர்—பலர்பால்.
குரங்கு, யானை, குளம்—ஒன்றன்பால்.
குரங்குகள், யானைகள், குளங்கள்—பலவின்பால்.

8. அப்பம் திருடின எலி

செட்டியார் வீட்டில் அடுக்களையில்—சென்ற
தீபா வளியன் றிரவுதனில்
வட்டிலில் அப்பம் இருந்ததம்மா !—அதை
வாசத்தி னல்அறிந் தோரெலிதான், (1)

" நெய்யினில் சுட்ட பணிகாரம்—இது
நேர்த்தியாச் சுட்ட பணிகாரம்
பையப்பை யக்கடித் துண்பதற்கும்—வெகு
பக்குவ மான பணிகாரம். (2)

" யார்க்கும் கிடையாப் பெருநிதியாம்—இதை
யான்இன்று பெற்றதென் பாக்கியமே ;
பார்க்கும் பொழுதேநீர் வாயினிலே—ஊறிப்
பாய்கின்ற தேபசி யாகின்றதே " (3)

என்றுசொல் லிஅந்த அப்பந்தன்னை—வாயில்
ஏந்திக் கடித்திழுத் தோடிடவே
கன்றப் பசித்த இளைஞரெல்லாம்—வந்து
கால்கடுக் கத்தேடிப் போயினரே ! (4)

ஆரும் அறியாத மூலையிலே—அந்த
அப்பத்தை அவ்வெலி கொண்டுவைத்துக்
கூரிய பல்லால் கறம்பி—ஒருபொடி
கூடச் சிதருமல் தின்றதம்மா ! (5)

மட்டுக்கு மிஞ்சிப் புசித்ததனல்—மூச்சு
வாங்கி வருந்தி வயிறூதி
கட்டப் படுவதைச் சுற்றத்தார் எல்லாரும்
கண்டொரு பண்டிதர்க் காளும் விட்டார். (6)

பண்டிதர் வந்துகை பார்த்தனர்—அவ்வெலி
பண்டம் முழுதையும் உண்ட கதை
விண்டதும் கேட்டுக் குறிகளும்—நோக்கி
விதிப்படி ஆய்ந்து விளம்பினரே. (7)

“ அப்பம் முழுதும்நீ தின்றனையே !—அதை
அன்பிற் குரியஉன் தம்பியர்க்கும்
ஒப்பவே பங்கிட் டளித்திருந்தால்—துன்பம்
ஒன்றும்வந் துன்னை அணுகாதே !” (8)

ஆனதி னாலேகிடைத்த—பொருளைநாம்
ஆகும்மட் டும்பகுத் துண்ணவேண்டும் ;
ஈனமாந் தன்னலத் தால்வருந் துன்பமே ;
இன்பம் அளிக்கும் பொதுநலமே. (9)

—கவிமணி

அடுக்களை	மட்டு	ஒப்ப
பையப்பைய	பண்டிதர்	தன்னலம்
கன்ற	உரிய	பணிகாரம்
சிதருமல்	ஈனம்	ஏந்தி
சுற்றத்தார்	வாசம்	கறம்பி
விளம்பினர்	பாக்கியம்	கட்டம்
பகுத்து	கால் கடுக்க	ஆய்ந்து
வட்டில்	மிஞ்சி	இளைஞர்
பெருநிதி	விண்டதும்	பொதுநலம்

பொருள் விளக்கம்

பையப்பைய - மெல்ல மெல்ல. கன்ற - வருந்த. சுற்றத்தார் - உறவினர். பெருநிதி - பெருஞ் செல்வம். ஈனம் இழிவு. கட்டம் - கஷ்டம்.

தெரிந்துகொள்

பண்டிதர் × பாமரர். பாக்கியம் × அபாக்கியம்.
தன்னலம் × பிறர் நலம்.

வினுக்கள்

1. எலி அப்பத்தை என்ன செய்தது ?
3. எலியின் வயிறு ஏன் ஊதிற்று ?
3. பண்டிதர் என்னவென்று சொல்லினர் ?
4. இக் கதையால் அறியும் நீதி யாது ?

பயிற்சி

1. பையப்பைய, கால் கடுக்க, தன்னலம், அன்பிற்குரிய, பக்குவம் - இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

1. வீடு, பக்குவம், இளைஞர், சுற்றத்தார், துன்பம் - எதிர்ச்சொற்களை எழுது.

3. இந்தக் கதையைச் சுருக்கமாக எழுது.

4. இதே போன்ற வேறு கதை ஒன்றை எழுது.

இலக்கணம்

இது ஒரு பாடல். இதைச் செய்யுள் என்றும் சொல்லுவர். உரைநடை என்ற சொல் செய்யுளுக்கு எதிர்ச் சொல். நாம் உரைநடையில் பேசவும் எழுதவும் செய்கிறோம். பாடலை இசையுடன் பாடவேண்டும். இப் பாடலைப் பாடு ; சொற்களின் ஓசை நயத்தைக் கவனி. ஒரே ஒலியுள்ள சொற்களை எடுத்து எழுது.

9. ஏழை பங்காளன்

1. பல ஆண்டுகளுக்கு முன் ருஷ்யா நாட்டை பீட்டர் என்ருெரு சக்கரவர்த்தி ஆட்சி புரிந்து வந்தார். அவர் நற்குண நற்செய்கைக்கு இருப்பிடம்; கேட்போர்க்கு இல்லை என்று சொல்லாத வள்ளல்; யாவரிடத்தும் இன்சொல் பேசுபவர்; எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர்.

2. அடிக்கடி அவர் ஒரு ஏழையைப் போல் மாறு வேடம் பூண்டு கூலியாளாகவும் மாலுமியாகவும் வேலை செய்வார். ஏழைகளின் எளிய வாழ்க்கையை அவர் மிகவும் விரும்பினுர். தாம் சக்கரவர்த்தி என்பதைத் தெரிவிக்காமல் உடலை வருத்தி வேலை செய்வார்; ஏழையைப்போல் உடை தரிப்பார்; அவர்கள் உணவையே அருந்துவார்.

3. ஒரு சமயம் பீட்டர் ஏழையைப்போல் மாறு வேடம் அணிந்து நகருக்கு வெளியே வெகுதூரம் சென்ருர். அப்பொழுது எங்கும் காரிருள் படர்ந்தது; வான மெங்கும் மூடுபனி; அவருடன் வேறு துணை ஒருவரும் இல்லை; வழிதெரியாமல் பீட்டர் வருந்தினுர். பசி காதை அடைத்தது. தமது உண்மை நிலையைப் பீட்டர் அறிவித்துக்கொள்ள விரும்பவில்லை. அங்கு இருந்த பல மாளிகைகளில் பிச்சை கேட்டார். ஒருவரும் அவருக்குப் பிச்சை இடவில்லை; பலர் அவரை விரட்டித் துரத்தினர். ஆதலால், அவர் செல்வச்செருக்கு மிகுந்தோரை விட்டு அகன்று, சற்றுத் தொலைவில் இருந்த ஒரு குடிசையை அணுகினுர்.

4. அக் குடிசையில் இருந்தவன் ஒரு ஏழைக் குடியானவன். பீட்டரின் நிலையை அறிந்து அவன் மனம் உருகினுன்; குடிசைக்குள் அவரை அழைத்துச்

சென்ருன்; தன் உணவைப் பகிர்ந்து அவருக்கு அளித்தான். பசியோடு இருந்த பீட்டர் அவ்வுணவைச் சுவைத்துப் புசித்தார்; அக் குடிசையிலேயே இளைப்பாறினர். காலையில் அவனிடம் விடைபெற்றுக் கொண்டு தலைநகரை அடைந்தார். குடியானவனும் வயல் வேலைக்குச் சென்ருன்.

5. மாலையில் குடியானவன் தன் வீட்டிற்குத் திரும்பி வந்தான். ஆனல் அங்கு அவன் கண்ட காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது! குடிசையின் முன்னல் சக்கரவர்த்தியின் இரதம் காணப்பட்டது; காவலாளர் அணியணியாக வகுத்து நின்றிருந்தனர்; பணியாளர் பலர் காணப்பட்டனர். குடியானவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை; தான் காண்பது கனவோ என்று ஐயம் கொண்டான்; என்ன செய்வது என்று தோன்ருமல் மரம்போலக் குடிசைக்கு எதிரே நின்ருன்.

6. பீட்டர் சக்கரவர்த்தி அவனை அணுகி, ''அருமை நண்பா! நேற்று நானே உன் இல்லத்தில் உணவு அருந்தினேன். முகமலர்ச்சியுடன் நீ எனக்கு அளித்த விருந்து அமுதம் போல் இருந்தது. உனது அன்புக்கு நான் எதைக் கொடுத்து ஈடு செய்ய முடியும்? இந் நாட்டின் செல்வத்தையே உனக்கு அளிக்கலாம். நான் அளிக்கும் இந்தப் பரிசுகளை நீ மறுக்காமல் ஏற்கவேண்டும்'' என்று வேண்டினர். உடனே பணியாளர் தங்கத்தட்டுகளில் பொன் நாணயங்களை ஏந்திக் கொண்டுவந்து குடியானவனிடம் கொடுத்தனர்.

7. குடியானவன் பீட்டரைப் பார்த்து வணங்கி, ''மன்னுதி மன்னரே! இப் பரிசுகளுக்கு நான் உரியவன் அல்லன். விருந்தினருக்கு இட்டு உண்பதே என்

தருமம்; அது என் கடமையும் ஆகும்,'' என்று கூறிக் கைகட்டி நின்ருன். பின்னர் சக்கரவர்த்தியின் வற்புறுத்தலின்மேல் அப் பரிசுகளை ஏற்றுக்கொண்டு அவரை "ஏழை பங்காளன்" என்று வாழ்த்தினுன்.

நற்குண நற்செய்கை	மாலுமி	பகிர்ந்து
மாறு வேடம்	மூடுபனி	பணியாள்
காரிருள்	உருகினுன்	அமுதம்
கண்கொள்ளாக் காட்சி	அணியணியாக	மேற்கொண்டவர்
இல்லம்	முகமலர்ச்சி	விரட்டி
உரியவன்	தருமம்	ஐயம்
பங்காளன்	வாழ்த்தினுன்	ஈடு
வள்ளல்	இன்சொல்	வற்புறுத்தல்

பொருள் விளக்கம்

இல்லம் - வீடு. வள்ளல் - இல்லை என்று சொல்லாமல் கொடுப்பவன். அணியணியாக - வரிசைவரிசையாக. பகிர்ந்து - பங்கிட்டு. ஈடு - சமம். ஐயம் - சந்தேகம். அமுதம் - பால்.

வினுக்கள்

1. பீட்டர் சக்கரவர்த்தியின் குணம் எத்தன்மையது ?
2. ஒரு சமயம் நகருக்கு வெளியே பீட்டருக்கு என்ன நேர்ந்தது ?
3. பீட்டருக்கு உணவளித்தது யார் ?
4. குடியானவன் தன் குடிசைக்கு முன்னுல் கண்ட காட்சி என்ன ?
5. பீட்டர் குடியானவனிடம் என்ன சொன்னுர் ?

பயிற்சி

1. இக் கதையை வகுப்பில் நடித்துக் காட்டு.
2. மாறுவேடம், நற்குண நற்செய்கை, காரிருள், கண்கொள்ளாக் காட்சி, அணியணியாக, முகமலர்ச்சி,

இன்சொல், ஐயம்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. நற்குணம், வள்ளல், தருமம், இன்சொல், அமுதம்—இவைகளுக்கு எதிர்சொற்களை எழுது.

4. பிரித்து எழுது—காரிருள், தங்கத்தட்டு, கைகட்டி, தலைநகரம், வயல்வேலை.

இலக்கணம்

1. இப் பாடத்தில் வந்துள்ள பெயர்ச்சொற்களுக்கு திணை, பால், எண் எழுது.

இடம்

சொற்கள் மூன்று இடங்களில் வழங்கப்பெறும். அவை, தன்மை முன்னிலை படர்க்கை என்பனவாம்.

தன்மை—நான், யான், நாம், யாம், நாங்கள், யாங்கள்.

முன்னிலை—நீ, நீர், நீங்கள்.

படர்க்கை—அவன், அவள், அவர், இவன், இவள், இவர், அது, இது, அவை, இவை.



10. அது என்ன?

1. பண்டைக் காலத்தில் 'பணம்' என்ருல் என்னவென்று மக்களுக்குத் தெரியாது. அந் நாட்களில் பணம் கிடையாது; பணத்திற்குப் பதில் பண்டங்களேக் கொடுத்துத் தேவையான வேறு பண்டங்களே வாங்கிக்கொள்வது வழக்கம். இதற்குப் 'பண்டமாற்று' என்பது பெயர். பணம் ஏற்பட்ட பின்பு, பணத்திற்கு எதை வேண்டுமாளுலும் வாங்கிக் கொள்ளும் நலம் இருக்கிறது.

2. பணம் எவ்வாறு செய்யப்படுகிறது? தங்கமும் வெள்ளியும் விலே உயர்ந்த உலோகங்கள். அவை பூமிக்குள்ளிருந்து வெட்டி எடுக்கப்படுகின்றன. பின்பு அவை சுத்தம் செய்யப்படுகின்றன. சுத்தமான தங்கமும் வெள்ளியும் கடினமானவை

அல்ல. ஆதலால் அவற்றைக் கெட்டிப்படுத்தக் குறிப்பிட்ட அளவு வேறு உலோகங்கள் அவற்றுடன் சேர்க்கப்படுகின்றன. இந்தக் கலப்புத் தங்கமும் வெள்ளியும் உருக்கப்பட்டு, வட்டமான நாணயங்களாகச் செய்யப்படுகின்றன. பின்பு அந்த நாணயங்களின் இரு பக்கங்களிலும் இயந்திரத்தின் உதவியால் எழுத்துக்களும் உருவங்களும் அச்சடிக்கப்படுகின்றன. இறுதியாக ஓர் இயந்திரம் இந்த நாணயங்களின் நிறையைக் கண்டுபிடிக்கிறது. ஒவ்வொரு வகை நாணயத்திற்கும் ஒரு குறிப்பிட்ட நிறை உண்டு. இயந்திரம் சரியான நிறையுள்ள நாணயங்களை ஒருபுறமாகத் திரட்டுகிறது; மற்றவை வேறு இடத்திற்கு உருக்குவதற்குக் கொண்டுபோகப்படுகின்றன; அவை அங்கு உருக்கப்பட்டு மீண்டும் நாணயங்களாகச் செய்யப்படுகின்றன.

3. நமது நாட்டில் மதிப்பு மிகுந்த நாணயம் **ரூபாய்**. இது வெள்ளியும் நிக்கல் என்ற உலோகமும் கலந்தது. அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்களும் வெள்ளியும் நிக்கலும் கலந்தவை; அரைக்கால் ரூபாய், ஒரு அணு நாணயங்கள் நிக்கலினுல் செய்யப்பட்டவை. அரையணு, காலணு நாணயங்கள் **செம்பு** என்ற உலோகத்தினுல் செய்யப்பட்டவை.

4. நாணயங்களைத் தவிர, நோட்டுக்களும் உண்டு. அவைகளை ஒருவகைத் தனித் தாளில் செய்கின்றனர். ஒரு நூறு ரூபாய் நோட்டு, நூறு ரூபாய்களுக்குச் சமம். ஒரு நோட்டை வெளிச்சத்தில் பார்த்தால், அதற்குள் சில கோடுகள் காணப்படும்; தாளின் சில பகுதிகள் மெல்லியவாக இருக்கும். இதேபோல நோட்டுக்களை வேறு ஒருவரும் அச்சடிக்க முடியாதபடி இந்தத் தாள்கள் உள்ளன.

5. நாணயங்களையும் நோட்டுக்களையும் அரசாங்கத்தார் மட்டும் வெளியிடலாம்; மற்றவர் வெளியிடுவது குற்றம் ஆகும்; அவர்கள் தண்டிக்கப் படுவார்கள். நோட்டுக்கள் பலரிடம் கைமாறுவதால் அவை கசங்கிக் கிழிந்துபோகும். ஆதலால் தினந் தோறும் புது நோட்டுக்கள் அச்சடிக்கப்படுகின்றன. அழுக்கடைந்த நோட்டுக்களை அமெரிக்காவில் ' சலவை ' செய்கிறார்களாம்.

6. உலகத்தில் வியாபாரம் எல்லாம் பணத்தின் வாயிலாகவே நடைபெறுவது முடியாது. ரூபாய் நோட்டுக்கள் இருப்பதால் பெருந்தொகைகளுக்கு எளிதில் வாணிபம் நடைபெறுகிறது; உண்டியல்கள் மூலமாகவும் வியாபாரம் நடைபெறுகிறது.

7. விடுதலை அடைந்த பாரதத்தில் காசி முதல் கன்னியாகுமரி வரையில் ஒரே வகை நாணயங்கள் உள்ளன. விடுதலைக்கு முன் ஐதராபாத்திலும் திருவாங்கூரிலும் வெவ்வேறு நாணயங்கள் இருந்தன. இப்பொழுது நாட்டின் எந்தப் பகுதியிலும் நமது நாணயங்கள் செலாவணி ஆகின்றன.

பண்டை	திரட்டுகிறது	நடைபெறுவது
அளவு	அரசாங்கத்தார்	செலாவணி
நிறை	வாயிலாக	உலோகம்
சமம்	உண்டியல்	இறுதியாக
சலவை	பண்டமாற்று	தாள்
வாணிபம்	நாணயம்	தண்டனை
வழக்கம்	மதிப்பு	பெருந்தொகை
கலப்பு	குற்றம்	மூலமாக

பொருள் விளக்கம்

பண்டை - பழமையான. நிறை - பளு. வாணிபம் - வர்த்தகம். இறுதி - கடைசி. தாள் - காகிதம்.

தெரிந்துகொள்

மதிப்பு × அவமதிப்பு. பண்டை × புதுமை.

வினக்கள்

1. பண்டமாற்று என்றுல் என்ன ?

2. நாணயங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன ?

3. நம் நாணயங்கள் எந்த உலோகங்களால் செய்யப்படுகின்றன ?

4. நோட்டுக்கள் எப்படி இருக்கும் ?

5. நோட்டுக்களால் என்ன பயன் ?

பயிற்சி

1. இருபொருள் கூறுக :—நாணயம், அன்னம், வாசம், விண்டது, நிறை.

2. சலவை, வாணிபம், உண்டியல், பண்டமாற்று, செலாவணி, பெருந்தொகை—இச் சொற்களே உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. இறுதி, தண்டனே, பெருந்தொகை, சுத்தம், உயர்ந்த—எதிர்ச்சொற்களே எழுது.

4. பின்வரும் பகுதிகளேப் பொருத்தி எழுது :

நாணயங்கள்	கோலி ஆடுகிறுர்கள்.
வண்ணுன்	பாண்டி ஆடுகின்றனர்.
தங்கம்	சலவை செய்கிறுன்.
பெண்கள்	விலே உயர்ந்தது.
பையன்கள்	உலோகங்களால் ஆனவை.

இலக்கணம்

முற்றுப்புள்ளி, வியப்புக்குறி, காற்புள்ளி, கேள்விக் குறி என்ற குறிகளேப்பற்றி முன் வகுப்பில் அறிந்திருக்கி றீர்கள். வேறு சில குறிகளும் உண்டு. அவை அரைப் புள்ளி (;), முக்காற்புள்ளி (:), மேற்கோள்குறிகள் (“...”) என்பன.

இப் பாடத்தில் அரை, முக்கால் புள்ளிகள் வைக்கப்பட் டுள்ள இடங்களேக் கவனி. ஒருவருடைய சொற்களே அவர் பேசுகிறபடியே எழுதும்பொழுது மேற்கோள் குறி-கள் பயன்படுகின்றன. (உ-ம்.) கந்தன் பையனேப் பார்த்து, “ இந்த நாணயம் செல்லாது ” என்றுன்.

11. மாயக் குதிரை

1. பாரசீக நாட்டில் ஷிராஸ் என்பது ஒரு நகரம். முன்னொரு காலத்தில் பாரசீக மன்னன் ஒருவன் அதைத் தலைநகராகக் கொண்டிருந்தான். ஒருநாள் அந்த மன்னனுடைய கொலுக்கூடத்திற்கு ஓர் இந்திய மந்திரவாதி சென்றான். அவன் பார்வைக்கு விகாரமான ஒரு குதிரையை உடன்கொண்டு சென்றான். அரசன் அக் குதிரையைப் பார்த்து நகைத்தான்.

2. அதுகண்ட மந்திரவாதி மன்னனைப் பார்த்து, "மன்னர் மன்ன! உருவைக் கண்டு எள்ளாதீர்; என் குதிரை அற்புதமானது; இதற்கு என்ன விலை கொடுத்தாலும் தகும்; உம்முடைய மைந்தன் பிரோஸ் இதன்மேல் ஏறிக்கொண்டு சேணத்திலுள்ள முளையைத் திருப்பினால், அதன் பெருமை தெரியும்" என்றான்.

3. அதைக் கேட்டவுடன், பிரோஸ் காத்திருக்க வில்லை; உடனே குதிரையின்மேல் பாய்ந்து ஏறி உட்கார்ந்து முளையைத் திருப்பினுன். என்ன ஆச்சரியம்! அம்புபோல் அக்குதிரை மேலே கிளம்பி ஆகாயத்தில் மறைந்தது! முதலில் இளவரசனுக்கு இன்பமாக இருந்தது. மீண்டும் ஷிராஸ் நகருக்கு வர விரும்பிக் குதிரையை அவன் திருப்பினுன். ஆனல் குதிரை திரும்ப மறுத்தது! முளையைப் பின் பக்கமாகத் திருப்பினுன்; குதிரை இன்னும் மேலே கிளம்பிச் சென்றது! பிரோஸ் திகில் அடைந்தான். சேணத்தை ஆராய்ந்து பார்த்தான்; மற்ருெரு சிறிய முளையைக் கண்டான். அதைத் திருப்பினுன்; குதிரை தரையை நோக்கி இறங்கத் தொடங்கிற்று! அதற்குள் அவன் நெடுந்தூரம் சென்றிருந்தான்!

4. அதற்குள் நடுநிசி ஆயிற்று. ஒரு மாளிகை யின் மேல்தளத்தில் குதிரை நின்றது. பிரோஸ் குதிரையினின்றும் இறங்கினுன். அங்கிருந்து மாடிப் படிகளின் வழியாகக் கூடத்திற்குச் சென்ருன். அது ஒரு சிங்கார மண்டபம்; வங்க நாட்டு அரசகுமாரி யின் கூடம். அவளிடம் சென்று தனக்குச் சம்பவித்த கஷ்டத்தை அவன் எடுத்துரைத்தான். அவள் அவ னுக்கு அன்புடன் உணவு அளித்தாள். அன்றிரவு பிரோஸ் கவலையற்றுத் தூங்கினுன்; காலையில் துயில் நீங்கி எழுந்தான்; அரசகுமாரியுடன் குதிரையின் மேல் ஏறிக்கொண்டான். இருவரும் பாரசீகம் சேர்ந் ததும் மணம் புரிய விரும்பினர்.

5. ஷீராஸ் நகருக்கு அருகில் ஒரு மாளிகையில் அரசகுமாரியை இறக்கிவிட்டு, பிரோஸ் அரண்மனைக் குச் சென்ருன். ஆனல் மாயக் குதிரையை அரச குமாரியிடமே விட்டுச் சென்ருன். தகப்பனுரைக்

கண்டு தனக்கு நேரிட்ட சம்பவங்களை பிரோஸ் உரைத்தான். அவன் வரலாற்றை அருகிலிருந்த மந்திரவாதி கேட்டான். உடனே அரசகுமாரி இருந்த அரண்மனைக்கு ஓடினான்; மாயக் குதிரையின் அருகில் சென்றான். மந்திரவாதி அரசகுமாரியைப் பார்த்து "உன்னை நகருக்கு அழைத்து வரும்படி பிரோஸ் என்னை அனுப்பினான்" என்று பொய் பகர்ந்தான். அரசகுமாரி அவனை நம்பி, குதிரையின் மேல் ஏறிக்கொண்டாள். மந்திரவாதி காஷ்மீர் நாட்டை நோக்கிக் குதிரையைத் திருப்பினான்.

6. தெருவில் காஷ்மீர மன்னன் பவனிவந்து கொண்டிருந்ததை அரசகுமாரி பார்த்துத் தன்னைக் காப்பாற்றும்படி ஓலமிட்டாள். அப்பொழுது குதிரை அவ்விடத்தை அடைந்தது. மன்னன் தன் வாளால் மந்திரவாதியின் சிரத்தைச் சேதித்தான். மந்திரவாதி இறந்ததும், காஷ்மீர மன்னன் அரசகுமாரியைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். சில நாட்களுக்குப் பின்பு மன்னன் அவளை மணக்க விரும்பினான். அவள் தான் ஒரு விரதம் பூண்டு இருப்பதாகவும், அது முடிந்ததும் மணப்பதாகவும் சொன்னாள்.

7. அரசகுமாரியை இழந்த பிரோஸ் காஷ்மீர நாட்டை அடைந்தான். அரண்மனை வாயிலில் ஒரு பிச்சைக்கார வேடம் பூண்டு யாசித்தான். அரசகுமாரி அவனைப் பிரோஸ் என்று அறிந்துகொண்டாள். உடனே அவனை உள்ளே அழைத்துச் சென்றாள். இருவரும் மாயக்குதிரையின்மேல் ஏறிப் பாரசீகம் சேர்ந்தனர். பின்பு இருவருக்கும் விமரிசையாகத் திருமணம் நடந்தது.

2056—4

கொலுக்கூடம்	நடுநிசி	பவனி
மூளை	பகர்ந்தான்	விரதம்
ஆராய்ந்து	சேதித்தான்	திருமணம்
சம்பவித்த	விகாரமான	உடன்கொண்டு
சிரம்	விமரிசை	சேணம்
யாசித்தான்	அற்புதமானது	திகில்
மந்திரவாதி	மறுத்தது	சிங்காரமண்டபம்
எள்ளாதீர்	மேல்தளம்	சம்பவம்
பெருமை	துயில்	ஓலம்

பொருள் விளக்கம்

சம்பவித்த - நேரிட்ட. சிரம் - தலை. யாசித்தான் - பிச்சை எடுத்தான். சேதித்தான் - வெட்டினான். துயில் - தூக்கம். பவனி - ஊர்வலம்.

வினாக்கள்

1. மந்திரவாதி மன்னனிடம் என்ன சொன்னான்?
2. பிரோஸ் எவ்வாறு குதிரையைத் தரைக்குக் கொணர்ந்தான் ?
3. குதிரை இறங்கிய இடம் எது ?
4. மந்திரவாதி அரசகுமாரியை அடைவதற்குச் செய்த சூழ்ச்சி என்ன ?
5. அரசகுமாரி மீண்டும் பிரோஸைப் பெற்றது எவ்வாறு ?

பயிற்சி

1. உடன்கொண்டு, பவனி, விரதம், துயில், கவலையற்று, திகில்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. விகாரம், துயில், மாயம், பின்பு, நகரம்—எதிர்ச் சொற்களை எழுது.

3. உன்னிடம் இக் கதையில் வந்துள்ளதுபோன்ற ஒரு மாயக் குதிரை இருந்தால் என்ன செய்வாய் என்று சுருக்கமாக எழுது.

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடு :

பிரோஸ் குதிரையின்மேல் ஏறிக் கொண்டவுடனே | அது வானத்தில் கிளம்பிற்று | ஆகா | என்ன அற்புதம் | என்று பிரோஸ் மகிழ்ந்தான் | ஆனால் | மீண்டும் கீழே இறங்க இயலவில்லை | ஐயோ | மதிமோசம் போனேனே | என்று வருந்தினான் |

இலக்கணம்

1. இப் பாடத்தில் வந்துள்ள பெயர்ச்சொல் வினைச் சொற்களுக்குத் திணை, பால், இடம், எண், எழுது.

எண்	சொல்வகை	எண்	பால்	திணை	இடம்
1 2 3					

2. எழுதும்பொழுதும், சொற்களை உச்சரிக்கும்பொழுதும் பிழை ஏற்படாமல் இருக்கவேண்டும். ர, ற, ல, ள, ழ, ன, ண, ந என்ற எழுத்துக்களின் உச்சரிப்பு வேற்றுமைகளை உணரவேண்டும்.

ஏரி - ஏறி   தரி - தறி   கரி - கறி
மரம் - மறம்   அரம் - அறம்

பலம் - பழம் - களம்   அன்னம் - அண்ணன் - தந்தம்
காலை - வாழை - வளை   பன்னீர் - கண்ணீர் - பந்தம்
கலை - கத்தாழை - நாளை   பன்றி - கன்று

வேற்றுமை

மந்திரவாதி வந்தான். மந்திரவாதியைப் பார்த்தான். மந்திரவாதியால் கெட்டான். இம்மூன்று வாக்கியங்களிலும் மந்திரவாதி என்ற பெயர்ச்சொல் மூன்று வகையாக மாறியுள்ளது. இதன் பொருளை ஐ-ஆல் மாற்றுகின்றன ; இவை வேற்றுமை உருபுகள் எனப்படும். வேற்றுமை எட்டு வகைப்படும்.

12. எல்லோரும் ஓர் குலம்

வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர் ;
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக் கொருநிற மாகும். (1)

சாம்பல் நிறமொரு குட்டி—கருஞ்
சாந்து நிறமொரு குட்டி ;
பாம்பு நிறமொரு குட்டி—வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி. (2)

எந்த நிறமிருந் தாலும்—அவை
யாவும் ஒரேதர மன்றோ ?
இந்த நிறம்சிறி தென்றும்—இஃது
ஏற்றமென் றும்சொல்ல லாமோ ? (3)

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை இல்லை.
எண்ணங்கள் செய்கைகள் எல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனக் காணீர். (4)

நிகர் என்று கொட்டு முரசே—இந்த
நீணிலம் வாழ்பவர் எல்லாம் ;
தகர் என்று கொட்டு முரசே—பொய்மைச்
சாதி வகுப்பினை எல்லாம். (5)

அன்பென்று கொட்டு முரசே—அதில்
ஆக்கம் உண் டாம்என்று கொட்டு ;
துன்பங்கள் யாவுமே போகும்—வெறும்
சூதுப் பிரிவுகள் போனல். (6)

—பாரதியார்

கருஞ்சாந்து	தகர்	கொட்டு
வேற்றுமை	ஏற்றம்	ஆக்கம்
நீணிலம்	நிகர்	மானுடன்
தரம்	பொய்மை	முரசு
காணீர்	வண்ணம்	சூது

பொருள் விளக்கம்

கருஞ்சாந்து - கருமையான சாந்து. வண்ணம் - நிறம். மானுடன் - மனிதன். நிகர் - சமானம். தகர் - நொறுக்கு. ஆக்கம் - உயர்வு.

வினாக்கள்

1. வெள்ளைப் பூனையின் குட்டிகளின் நிறம் என்ன ?
2. நிறத்தை ஏன் குறை கூறலாகாது ?
3. மனிதரிடையே பொதுவாக உள்ளது யாது ?
4. நாட்டில் எதைத் தகர்க்க வேண்டும் ?
5. எதில் ஆக்கம் உண்டு ?
6. துன்பங்கள் எப்பொழுது போகும் ?

பயிற்சி

1. மனிதர் யாவரும் ஒரு குலம் என்பதை விளக்கு.

2. வேற்றுமை, ஏற்றம், கருமை, ஒன்று, பொய்மை —எதிர்ச்சொற்களை எழுது.

3. பிரித்து எழுது :—கருஞ்சாந்து, நீணிலம், ஆக்கமுண்டு, சூதுப்பிரிவு, வெள்ளைப்பால்.

வேற்றுமை

பூனை ஓடிற்று—பூனை என்பது முதல் வேற்றுமை ; உருபு இல்லை.

பூனையைப் பார்த்தேன்—இரண்டாம் வேற்றுமை ; உருபு ஐ.

பூனையால் பிழைத்தது பூனையோடு வந்தான் பூனையுடன் கொஞ்சினான்	மூன்றும் வேற்றுமை—ஆல், ஒடு, உடன் உருபுகள்.

பூனைக்குப் பால் கொடுத்தாள்—நான்காம் வேற்றுமை உருபு கு.

பரதனின் மூத்தவன் இராமன் தென்னையிலிருந்து இளநீர் கிடைக்கும்.	ஐந்தாம் வேற்றுமை - இன், இருந்து உருபுகள்
இது இராமனது தோட்டம். இராமனுடைய தோட்டம் பெரியது.	ஆறும் வேற்றுமை - அது, உடைய உருபுகள்
தோட்டத்தில் தென்னை மரங்கள் அதிகம். கந்தனிடம் தேங்காய்கள் உள்ளன. தோட்டத்தின்கண் பழங்கள் உள்ளன.	ஏழாம் வேற்றுமை - இல், இடம், கண் - உருபுகள்

குழந்தாய் ! அழாதே - எட்டாம் வேற்றுமை. இதற்கு உருபு இல்லை. படர்க்கையை முன்னிலையாக்கி அழைப்பது எட்டாம் வேற்றுமை. இதை **விளி வேற்றுமை** என்றும் சொல்வர்.

இப்பாடத்தில் இரண்டாம் பத்தியில் காணப்படும் வேற்றுமை உருபுகளை வகைப்படுத்தி எழுது.

13. கற்பகத் தரு

1. வானுலகில் ஒரு கற்பக விருட்சம் இருப்பதாகச் சொல்லுகின்றனர். வானவர் விரும்பும் யாவற்றையும் அத் தரு அளிக்குமாம். அத்தகைய விருட்சம் பூவுலகிலும் இருக்கிறது. தென்னை மரமே பூலோகத்தின் கற்பகத்தரு ஆகும். தென்னை மரத்தின் அடிமரம், மட்டைகள், ஓலைகள், இளநீர், தேங்காய் முதலியவை சுமார் முந்நூற்று அறுபது வகைகளாகப் பயன்படுகின்றன என்று கணக்கிடப்பட்டுள்ளது.

2. தென்னை மரத்தைப்பற்றி ஒரு பழைய வரலாறு உண்டு. இந்தியாவை ஆண்டுவந்த அரசன் ஒருவன், வேற்று நாட்டு மன்னன் ஒருவனுக்கு மதிப்பு வாய்ந்த ஒரு பரிசு அனுப்ப முடிவு செய்தான். அவன் தன் அமைச்சர்களைக் கலந்துஆலோசித்தான். அவர்கள் நெடுநேரம் யோசித்து, “அரசே! தென்னை மரத்தாலான கப்பல் ஒன்றைச் செய்து, அதில் அம் மரத்தில் உண்டாகும் பொருள்களை நிரப்பி, அதை அம் மன்னனுக்குப் பரிசாக வழங்கலாம்” என்று சொன்னார்கள். உடனே தென்னை மரங்களை வெட்டிக் கப்பல் அமைக்கப்பட்டது. பாய்மரம், கயிறு, ஆசனங்கள், கட்டில்கள் முதலிய பலவும் தென்னை மரத்தாலும் ஓலைகளாலும் செய்யப்பட்டன. கப்பலில் பல வகைக் கயிறுகளும், இளநீர்களும், தேங்காய்களும், பாய்களும், பெட்டிகளும், கம்பளங்களும், எண்ணெய் வகைகளும், கூடைகளும் வைத்து அனுப்பப்பட்டன. இதிலிருந்து தென்னை மரம் எவ்வளவு பெருமையாகக் கருதப்பட்டது என்பது புலனாகிறது.

3. தென்னை மரம் வெப்பமான பிரதேசங்களில் வளரும். கடற்கரைகளில் அவைகளை அதிகமாகக்

காணலாம். உள்நாட்டிலும் மணல் கலந்த பூமியில் தென்னை மரம் செழிப்பாக வளரும். தென்னை மரம் சுமார் எண்பது அடி உயரம் வளரும். மரத்தின் உச்சியில் மட்டைகள் இருக்கும்; மட்டைகளில் ஓலைகள் இருக்கும். மரத்தில் பசுமை கலந்த பூக்கள் தோன்றிய பின் காய்கள் உண்டாகும். முற்றாத காய்களை இளநீர் என்பர். இளநீருக்குள்ளே சுவை மிகுந்த தண்ணீரும் வெண்மையான பருப்பும் இருக்கும்; இவை சிறந்த உணவு ஆகும். உஷ்ணமான இடங்களில் வேனிற்காலத்தில் இளநீர் ஒரு சிறந்த பானம் ஆகும்.

4. முற்றின காய்க்குத் தேங்காய் என்பது பெயர். அதன் உள்ளிருக்கும் பருப்பு உலர்ந்தால் கொப்பரை ஆகும். கொப்பரையிலிருந்து எண்ணெய் எடுப்பார்கள். நன்கு உலர்ந்த கொப்பரையைச் செக்கில் ஆட்டினால், தேங்காய் எண்ணெய் கிடைக்கும்; அதைக் கொதிக்க வைத்து வடிகட்டினால் சுத்தமான எண்ணெய் கிடைக்கும். தேங்காய் எண்ணெயையும் முதிர்ந்த பருப்பையும் சமையலுக்குப் பயன்படுத்துவார்கள். தேங்காயின் மேலுள்ள நாரைக் கயிருகத் திரிப்பார்கள்; பாய் நெய்வார்கள்; இன்னும் பல பொருள்களும் செய்வார்கள். அவ்வப்பொழுது மரமேறிகள் மரத்தின்மேல் ஏறிக் காய்களைப் பறிப்பார்கள்.

5. தென்னை மரம் ஐந்து அல்லது ஆறு வருஷங்களில் பலன் அளிக்கும்; நூறு ஆண்டுகள் வரையில் ஒரு மரம் பலன் அளிக்கும் என்று கருதப்படுகிறது. மக்களுக்குப் பல வகைகளில் பயன்படும் இம் மரத்தைக் கற்பகத்தரு என்று கருதுவதில் வியப்பென்ன ?

கற்பகம்	கொப்பரை	அமைச்சர்
மட்டை	வானுலகம்	செழிப்பாக
ஆசனம்	வேற்று	பலன்
பானம்	உள்நாடு	வானவர்
தரு	மரமேறி	பாய்மரம்
புலனுகிறது	விருட்சம்	வேனிற்காலம்

பொருள் விளக்கம்

கற்பகம் - தேவலோக விருட்சம். தரு - மரம், விருட்சம். புலனுகிறது - தெரிகிறது. வேனிற்காலம் - கோடைக் காலம். அமைச்சர் - மந்திரி.

வினுக்கள்

1. தென்னை எத்தனை வகைகளில் பயன்படுகிறது ?
2. தென்னை மரத்தைப் பற்றிய பழைய வரலாறு யாது ?
3. தென்னை மரம் எப்படிப்பட்ட இடங்களில் வளரும் ?
4. கொப்பரை என்பது என்ன ?
5. தென்னை மரம் எவ்வளவு ஆண்டுகளில் பலனளிக்கும் ?
6. தென்னையைக் 'கற்பகத்தரு' என எவ்வாறு சொல்லலாம் ?

பயிற்சி

1. தென்னை மரத்தின் பல பாகங்களையும் அவற்றின் உபயோகத்தையும் கீழுள்ளபடி வகைப்படுத்தி எழுது :

எண்	பாகங்கள்	உபயோகங்கள்	பொருள்கள்
1.			
2.			
3.			

2. ஆசனம், உள்நாடு, மரமேறி, அமைச்சர், வேனிற்காலம். இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. வானுலகம், புலனுகிறது, வேனிற்காலம், கற்பகத் தரு, தென்னைமரம் - பிரித்து எழுது.

14. நரியும் கிளியும்

1. ஒரு காட்டில் ஒரு நரியும் ஒரு கிளியும் வெகு நேசமாக வாழ்ந்து வந்தன. கிளி நற்குணம் மிகுந்தது; நரியினிடம் உண்மையான நட்புக் கொண்டிருந்தது. ஆனால் நரியோ சுயநலம் மிகுந்தது. ; பொறாமைக் குணம் படைத்தது; தந்திரத்தில் கை தேர்ந்தது.

2. ஒரு நாள் நரி கிளியைப் பார்த்து, "நீ எனக்கு உண்மை நண்பனா என்று சந்தேகம் தோன்றுகிறது. உண்மை நண்பனாக நீ இருந்தால், எனக்கு நீ வேண்டுமட்டும் உணவு சம்பாதித்துக் கொடுக்க வேண்டும்; நான் நன்றாகச் சிரிக்கும்படி செய்ய வேண்டும்; கண்களில் கண்ணீர் தாரை தாரையாக வழியும்படி என்னை அழவைக்க வேண்டும்; ஆபத்து நேரிடும்பொழுது என் உயிரைக் காப்பாற்ற வேண்டும்." என்று சொல்லிற்று. கிளியும் அவ்வாறே செய்வதாகச் சம்மதித்தது.

3. உடனே கிளியும் நரியும் புறப்பட்டு ஒரு கிராமத்தை அடைந்தன. அங்கு ஓரிடத்தில் சில கோழிகளும் குஞ்சுகளும் இரை பொறுக்கித் தின்று கொண்டிருந்தன; அருகில் இரு சிறுவர்கள் காவல் புரிந்து கொண்டிருந்தனர். கிளி பையன்கள் அருகில் வேகமாகப் பறந்து சென்றது; அதைப் பிடிக்க அவர்கள் ஓடி வந்தனர். கிளி வெகு நேரம் அவர்களை அங்குமிங்கும் அலைக்கழித்தது. இதற்குள் நரி கோழிக் குஞ்சுகளை வயிறார விழுங்கிவிட்டது!

4. கிளி திரும்பி வந்ததும், நரியும் கிளியும் மீண்டும் ஒரு பாதை வழியே சென்றன. அவர்களுக்கு முன்னால் இருவர் ஒருவர்பின் ஒருவராகப்

போய்க்கொண்டிருந்தனர். அவர்களில் முன்னால் போய்க்கொண்டிருந்தவன் தலையின்மேல் கிளி பறந்து உட்கார்ந்தது. பின்னால் வந்தவன் அக் கிளியைப் பிடிக்க எண்ணி, அதன்மேல் தன் மிதியடியைக் கழற்றி எறிந்தான். கிளியோ உடனே பறந்து போயிற்று. மிதியடி தலையில் தாக்கியதும், இருவருக்கும் சண்டை மூண்டது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த நரிக்குச் சிரிப்பு தாங்க முடியவில்லை; வயிறு வலிக்கும் வரையில் சிரித்தது.

5. நரியும் கிளியும் மீண்டும் காட்டை அடைந்தன. அங்கே பல வேடுவர்கள் வேட்டையாடிக் கொண்டிருந்தனர்; வேட்டை நாய்கள் அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தன. கிளி ஒரு மரத்தில் உட்கார்ந்து "நரி! நரி!" என்று கத்திற்று. நரி பயந்து ஒரு மரப் பொந்தில் பதுங்கி இருந்தது. கிளியின் கூச்சலைக் கேட்ட வேட்டைக்காரன் வேட்டை நாய்களுடன் நரியைத் தேடலானான். சிறிது நேரத்தில் வேட்டை நாய்கள் நரியைக் கண்டுபிடித்துப் பொந்திலிருந்து வெளியே இழுத்து அதன்மேல் பாய்ந்தன. நரி மண்ணில் புரண்டு 'கோ' வெனக் கதறி அழுதது. கிளி, வேட்டைக்குச் சங்கு ஊதுகிறவனிடம் சென்று, "வேட்டை முடிந்து விட்டது; எல்லாரும் வீடு திரும்பவேண்டும் என்பதற்காகச் சங்கு ஊதும்படித் தலைவன் சொல்லச் சொன்னான்" என்றது. அதை அவன் நம்பி, உடனே சங்கு ஊதினான். வேட்டை முடிந்து விட்டது என்று வேட்டை நாய்கள் நரியை விட்டுவிட்டு ஓடிப் போயின. நரி, உடலில் காயங்களுடன் தப்பிப் பிழைத்தது.

6. கிளி நரியைப் பார்த்து, "நரியண்ணா! உன்னை நான் வயிறார உண்ணச் செய்தேன்; குலுங்

கக் குலுங்கச் சிரிக்கச் செய்தேன்; 'கோ' வென்று கதறி அழச் செய்தேன். உன் உயிரையும் காப்பாற்றி னேன். ஆதலால், நீ சொன்னவாறு நான் உன் உண்மை நண்பன். ஆயினும் நீ எனக்கு ஓர் உதவி யும் செய்யவில்லை. ஆதலால் நீ எனக்கு உண்மை யான நண்பன் அல்ல. இன்று முதல் நாம் பிரிந்திருப் பதே நலம்'' என்று சொல்லிப் பறந்து சென்றது. ஏமாற்றமடைந்த நரி, உண்மை நண்பனை இழந்ததற் காக மிகவும் வருத்தப்பட்டது.

சந்தேகம்	சுயநலம்	சம்மதித்தது
வயிறார	தாரைதாரையாக	கதறி
சம்பாதித்து	மூண்டது	தந்திரம்
மிதியடி	பொறுமை	அலைக்கழித்து

பொருள் விளக்கம்

வயிறார - திருப்தியாக. மிதியடி - செருப்பு. கதறி - வாய்விட்டு அழுது.

வினாக்கள்

1. கிளியும் நரியும் எப்படிப்பட்ட குணங்கள் உள்ளவை?
2. நரி கிளிக்கு என்ன கூறிற்று?
3. நரி கோழிக் குஞ்சுகளை எப்படித் தின்றது?
4. நரி ஏன் சிரித்தது?
5. நரி ஏன் கதறி அழுதது?
6. நரி எவ்வாறு வேட்டை நாய்களிடமிருந்து தப்பிப் பிழைத்தது?
7. கிளி ஏன் நரியை விட்டுச் சென்றது?

பயிற்சி

1. சுயநலம், வயிறார, மிதியடி, சங்கூதினான், கோழிக்குஞ்சு — பிரித்து எழுது.

2. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: வயிறுர, குலுங்கக் குலுங்க, தாரை தாரையாக, பொருமை, சுயநலம்.

இலக்கணம்

போனுன், போகிறுன், போவான் என்ற வினைச் சொற்கள் போதல் என்னும் தொழிலைக் குறிக்கின்றன. போனுன் என்பதில் தொழில் நடந்து முடிந்தது. ; போகிறுன் என்பதில் தொழில் இப்பொழுது நடக்கிறது ; போவான் என்பதில் தொழில் இனிமேல் நடக்கப் போகிறது.

போனுன் — இறந்த காலம்.
போகிறுன் — நிகழ்காலம்.
போவான் — எதிர் காலம்.

பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினைச் சொற்களின் காலத்தை எழுது :

1. நரி வயிறுரச் சாப்பிட்டது.
2. கிளி பறந்து சென்றது.
3. பையன்கள் சிரிக்கின்றனர்.
4. நரிக்குத் துன்பம் நேரிடும்.
5. இருவரும் சண்டையிட்டனர்.
6. கிளி நரியைப் பரிகசிக்கிறது.
7. கமலா தோட்டத்திற்குப் போகிறுள்.
8. விமலா ஊருக்குப் போவாள்.
9. தென்னையில் தேங்காய் தோன்றும்.
10. நரியும் கிளியும் நட்பாக இருந்தன.

15. தெரியுமா ?

1. மீன் பிடிப்பது எவ்வாறு என்று நீங்கள் அறிவீர்கள். ஆற்றிலும் கடலிலும் கப்பல்களிலும் ஓடங்களிலும் சென்று வலைவீசி மீன் பிடிப்பார்கள் ; தூண்டில் போட்டு ஒவ்வொரு மீனாகவும் பிடிப்ப துண்டு. நீரில் வாழும் பிராணிகளில் திமிங்கிலம் மிகப் பெரியது. அதை எவ்வாறு பிடிக்கிறார்கள் தெரியுமா ? சிறு கப்பல்களில் ஏறிக்கொண்டு சமுத்திரத்தில் திமிங்கிலத்தைத் தேடுவார்கள். சில சமயங்களில், திமிங்கிலம் நீர்மட்டத்திற்கு மேல் தன் முதுகைக் காட்டும். கப்பலின் மேல்தளத்திலிருந்து அதை மாலுமிகள் கவனிப்பார்கள். முதுகு தென்பட்டவுடன், கூர்மையான சூலம் போன்ற ஓர் ஆயுதத்தைப் பீரங்கியில் பொருத்தி, திமிங்கிலத்தின் முதுகை நோக்கிச் சுடுவார்கள். அந்த ஆயுதத்தில் நீண்ட கயிற்றின் ஒரு முனை கட்டப்பட்டிருக்கும். சூலம் முதுகில் பாய்ந்தவுடன் திமிங்கிலம் கயிற்றையும் இழுத்துக்கொண்டு நீருக்குள் ஓடும். கயிற்றின் மற்றொரு முனை மாலுமிகளிடம் இருக்கும். ஆதலால் திமிங்கிலம் தப்பி ஓட முடியாது.

2. உங்களுக்கெல்லாம் மூக்குக் கண்ணாடி அணிந்து கொள்வதென்றால் விருப்பம் அல்லவா !

மூக்குக் கண்ணுடியைக் கண்டு பிடித்தவர் யார்? எப்பொழுது அதுகண்டு பிடிக்கப்பட்டது? உங்களுக்குத் தெரியுமா? பதின்மூன்ரும் நூற்ருண்டில் ஸால்கினே என்பவர் அதைக் கண்டு பிடித்தார். அவர் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர். இத்தாலி ஐரோப்பாவில் உள்ள ஒரு தேசம். பதினைந்தாம் நூற்ருண்டில் மக்கள் மூக்குக் கண்ணுடி அணியத் தொடங்கினர். படித்தவர்கள்மட்டும் அப்பொழுது மூக்குக் கண்ணுடி அணிவது வழக்கமாக இருந்தது; மற்றவர்கள் அணிந்தால் பரிகாசம் செய்து வந்தனர். இப்பொழுது அநேகர் அழகுக்காகவே மூக்குக் கண்ணுடியை அணிந்து கொள்ளுகின்றனர். கண்பார்வையில் குறை இருந்தால், தகுந்த கண் மருத்துவரிடம் சோதனை செய்துகொண்டு, அவருடைய ஆலோசனையின்மேல் கண்ணுடி அணிவது நலம். சமீபகாலத்தில் கண்ணுக்குத் தெரியாத கண்ணுடி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அது மிகவும் மெல்லியதாக இருக்கும். அதைக் கண் இமைக்குள் வைத்துக் கொள்ளலாம். பிறருக்குத் தெரியாமலேயே ஒருவர் கண்ணுடி போட்டுக்கொள்ள இக்காலத்தில் வசதியுண்டு.

3. நம்மில் பலர் ரெயில் வண்டியில் பிரயாணம் செய்திருக்கின்றனர். ரெயில் ஊதுவதையும் நாம் கேட்டிருக்கிருேம். நிலக்கரி இல்லாமல் ரெயில் வண்டிகள் இயங்கமாட்டா; அவை ஊதவும் மாட்டா. நிலக்கரி, ரெயில் ஓடுவதற்கு அதிகமாகத் தேவையா அல்லது ஊதுவதற்கு அதிகம் தேவையா? ரெயில் ஓடுவதற்குத்தான் நிலக்கரி அதிகம் தேவை என்று நாம் சொல்லுவோம். ஆனுல் உண்மை அதுவன்று. ஒருமுறை ரெயில் ஊதுவதற்கு வேண்டும் நிலக்கரியில், ஒரு ரெயில் அரைமைல் தூரம் போகலாம்.

நிபுணர்கள் இதைக் கணக்கிட்டுக் கண்டுபிடித்திருக்கின்றனர். ரெயில் ஊதுவதால் ஓர் ஆண்டில் இருபத்துநாலாயிரம் டன்களுக்கும் அதிகமான நிறையுள்ள நிலக்கரி செலவாகிறது என்று கணக்கிட்டுள்ளனர்.

தூண்டில்	சோதனை	மேல்தளம்
சூலம்	நிபுணர்	பரிகாசம்
மருத்துவர்	நீர்மட்டம்	இமை
இயங்க	நூற்றாண்டு	நிறை
திமிங்கிலம்	சமீபகாலம்	வசதி
பொருத்தி	கணக்கிட்டு	நிலக்கரி

பொருள் விளக்கம்

சூலம் - கூரான ஒருவகை ஆயுதம். மருத்துவர் - வைத்தியர். இயங்க - வேலைசெய்ய. சோதனை - ஆராய்ச்சி. நிபுணர் - கெட்டிக்காரரர். நீர்மட்டம் - தண்ணீரின் மேல் பரப்பு. நூற்றாண்டு - நூறு வருஷங்கள். பரிகாசம் - கேலி. வசதி - சௌகரியம்.

தெரிந்துகொள்

நீர் + மட்டம் = நீர்மட்டம். நூறு + ஆண்டு — நூற்றாண்டு. சமீபம் + காலம் = சமீபகாலம். கணக்கு + இட்டு — கணக்கிட்டு.

வினாக்கள்

1. திமிங்கிலத்தை எவ்வாறு பிடிப்பார்கள் ?
2. மூக்குக் கண்ணாடியைக் கண்டுபிடித்தது யார் ?
3. இரயிலில் நிலக்கரி அதிகம் செலவாவது எப்பொழுது ?

பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது: படித்தவர், சமீபம், மெல்லிய, பலர், அதிகம்.

2. நூற்றுண்டு, தூண்டில், மாலுமி, நிபுணர், வசதி— இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பிரித்து எழுது: கண்பார்வை, மேல்தளம், மூக்குக்கண்ணுடி, கண்ணிமை.

இலக்கணம்

செய்வினை—செயப்பாட்டு வினை

மாலுமி திமிங்கிலத்தைக் கொன்ருன்—இதில் கொன்ருன் என்பது மாலுமி செய்த வினை அல்லது தொழில்; ஆதலால் கொன்ருன் என்பது செய்வினை. திமிங்கிலம் மாலுமியால் கொல்லப்பட்டது—இதில் கொல்லப்பட்டது என்பது மாலுமி செய்த தொழிலால் விளைந்த செயல். ஆதலால் கொல்லப்பட்டது என்பது செயப்பாட்டுவினை.



16. செஞ்சி நகர்ச் சிறப்பு

சீரும் சிறப்புமுள்ள தேசிங்கு மகாராஜன்
பேரும் பிரபலமும் பெருகி வரும்படியாய்
செற்நெற்கதிர் பெருத்துச் செழித்து வளர்கிறதும்
கன்னற் கொழுத்துக் காட்டை மறைப்பதுவும்
வன்புலியும் பசுவும் மருவியே வாழ்கிறதும்

காடைகவு தாரி காட்டுப்புரு கூவுறதும்
பேடைமயில் கூடிப் பிரிய மடைகிறதும்
புன்னை மலர்ச்சோலை பொருந்தி நிறைந்திடவும்
சந்தனச் சோலைகளும் சாதிமல்லி பூத்திடவும்
மந்தாரை கோங்கு மல்லிகைப்பூச் சோலைகளும்

தாமரைப் பொய்கைகளும் தடாகமுள்ள ஏரிகளும்
வாமமுறும் கானும் வண்புகழு மென்னசொல்வேன்!
செஞ்சி நகர்ச்சீரைச் சிலவற்றை எடுத்துரைப்போம் :
எஞ்சலில்லா வீதிகளும் எழில்தோ ரணநிரையும்
வாழைக்கமுகங்களெங்கும் வளமாகக் கட்டியதும்

ஏழையரைக் கூவியன்னம் இட்டு வருகிறதும்
இந்திர லோகம்போல் இருக்கும் அரண்மனையும்
வேதியர்கள் கூடி வேதம் படிப்பதுவும்
நீதி தவருமல் நிகர்புலவோர் பாடுவதும்
பொன்னகரி தன்னைப்போல் பொருந்திநின் ருடுவதும்

மன்னன்சீர் கீர்த்திதன்னை வாழ்த்தி வருகிறதும்

—தேசிங்கு ராஜன் கதை

சீர்	நிரை	பேடை
கன்னல்	பிரபலம்	வண்புகழ்
தடாகம்	மருவி	ஏழையர்
எழில்	கானு	வேதம்
கந்தம்	வளமாக	செந்நெல்
வன்புலி	வேதியர்	பொய்கை
வாமம்	பெருகி	எஞ்சல்

பொருள் விளக்கம்

சீர் - செல்வம், பெருமை. சிறப்பு - மதிப்பு. பிரபலம் - புகழ். கன்னல் - கரும்பு. பேடை - பெண் இனம். பொய்கை - இயற்கை நீர்நிலை. வாமம் - அழகு. எஞ்சல் - குறைவு. நிரை - வரிசை. வேதியர் - பிராமணர்.

வினாக்கள்

1. செஞ்சியை ஆண்ட மன்னன் யார்?
2. செஞ்சியில் காணும் தாவரங்களும் பிராணிவகைகளும் யாவை?

பயிற்சி

1. பிரபலம், காளுறு, எழில், பொய்கை, தோரணம் - இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. செஞ்சி நகரின் சிறப்பை ஐந்து வாக்கியங்களில் எழுது.

இலக்கணம்

கீழே காணும் செய்வினைகளைச் செயப்பாட்டு வினைகளாக மாற்று :

1. தேசிங்கு செஞ்சிக் கோட்டையைக் கட்டினன்.
2. மக்கள் ஏழைகளுக்கு அன்னம் இட்டனர்.
3. இராமு மூக்குக் கண்ணுடி அணிந்தான்.
4. செம்படவன் மீன் பிடித்தான்.
5. ஸால்விஞே மூக்குக் கண்ணுடியைக் கண்டுபிடித்தான்.



17. கவி இரவீந்திரர்

1. இன்று நாம் உரிமைபெற்ற பாரத நாட்டில் வாழ்கிறோம். சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக அந்நியருக்கு அடிமைகளாக இருந்தோம். அக்காலம் இப்பொழுது பகற்கனவாகத் தோன்றுகிறது. நமக்கு என்று ஒரு தேசீயப் பாடலைத் தேர்ந்தெடுத்துக்கொண்டோம். அப்பாடலை நீங்கள் பல இடங்களில் பாடக் கேட்டிருப்பீர்கள். 'ஜனகண மன அதி நாயக ஜயஹே பாரத பாக்ய விதாதா' என்பதே அப்பாடல். இப்பாடலை நீங்கள் ரேடியோவில் கேட்டிருப்பீர்கள் ;

சினிமாவிலும் கேட்டிருப்பீர்கள். இதற்குத் தேசீய கீதம் என்பது பெயர்.

2. இப்பாடலை இயற்றியவர் இரவீந்திரநாத டாகுர் என்பவர். அவர் இப்பொழுது அமர வாழ்வு அடைந்துள்ளார். அவர் பெரிய கவிஞர்; பல அழகான கவிகளை இயற்றியுள்ளார். அவருடைய திறமையைப் புகழ்ந்து நோபல் பரிசு அவருக்கு வழங்கப்பட்டது.

3. இரவீந்திரர் செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்தவர். கல்கத்தா நகரத்தில் இருந்த அவர்களுடைய வீடு ஒரு பெரிய மாளிகை. குழந்தை இரவிக்குக் கூட்டத்தைக் கண்டால் பிடிப்பதில்லை; தனிமையில் உட்கார்ந்துகொண்டு ஏதேதோ யோசனை செய்துகொண்டு இருப்பார். அந்த மாளிகையின் ஒரு புறத்தில் ஒரு பண்டைக் காலப் பல்லக்கு இருந்தது. குழந்தை இரவி அந்தப் பல்லக்கில் அமர்ந்து கொள்வார்; பல்லக்கைத் தூக்கிச் செல்ல ஆட்கள் இல்லை; ஆனாலும் கற்பனையால் பிரயாணம் செய்வார். அதை வானவூர்தி என்று எண்ணுவார்; அதில் ஏறிக்கொண்டு காடு மலை வனந்திரங்களைக் கடந்து செல்வதாகப் பாவித்துக்கொள்வார்.

4. இரவியினிடம் மரத்தினால் செய்யப்பட்ட சிங்கம் ஒன்று இருந்தது; மரத்தினால் செய்த கத்தி ஒன்றும் இருந்தது. நவராத்திரியில் சிங்கத்தைப் பலி கொடுத்தால் அற்புதமான சக்தியைப் பெறலாம் என்று யாரோ சொன்னது இரவியின் செவியில் விழுந்தது. அந்த அற்புதமான சக்தியைப் பெற அவர் முடிவு செய்தார். மரக் கத்தியால் மரச் சிங்கத்தை வெட்டத் தொடங்கினார். கத்தியில் கூர்மை இல்லை! சிங்கமும் மரப்பொம்மை! சத்தம் மட்டும் கேட்டது; பலன் ஏதுமில்லை!

5. இரவிக்குப் பல அண்ணிகள் இருந்தனர். அவர்களில் ஒருத்தி சீனக் கரிக்குருவி ஒன்றை வளர்த்து வந்தாள். உல்லாசமாகப் பறந்து திரியும் பறவையைக் கூட்டில் அடைத்து வைத்தது இரவிக்குப் பிடிக்கவில்லை; அதைக் கண்டு அவர் வேதனைப் பட்டார். அண்ணி இரண்டு அணிற்பிள்ளைகளையும் வளர்த்து வந்தாள். "அண்ணி! குதித்து விளையாடும் அணில்களைக் கட்டுக் காவலில் அடைத்து வைப்பது பெரும் பிழை. அவற்றை விட்டுவிடு" என்று இரவி அண்ணியிடம் மன்றாடினார். "போடா போ! பெரிய ஞானிபோல் பேசுகிறாய்" என்று அண்ணி பரிகாசம் செய்தாள். ஆனால் இரவீந்திரர் யாருமறியாமல் அந்த அணிற் பிள்ளைகளை விடுதலை செய்து விட்டார். அண்ணியின் வசவை அவர் பொருட்படுத்தவில்லை.

6. இரவீந்திரரின் கவிதைகள் தேன்போன்று இனிமையானவை. இன்று இரவீந்திரர் உலகம் முழுதும் போற்றப்படுகிறார். அவர் மறைந்தாலும் அவருடைய புகழ் இன்றும் மறையவில்லை; தம்முடைய கவிதைகள் வாயிலாக அவர் நமக்குக் காட்சி அளித்து வருகிறார்.

உரிமை	அண்ணி	கற்பனை
இயற்றியவர்	ஞானி	சக்தி
தனிமை	அந்நியர்	கட்டுக்காவல்
வனந்திரம்	கவிஞர்	காட்சி
பலன்	பல்லக்கு	தேசீயகீதம்
கவிதை	பலி	செல்வம்
அடிமை	வேதனை	வானவூர்தி
அமரவாழ்வு	வசவு	துவக்கினர்
ஏதேதோ	பகற்கனவு	மன்றாடினர்
பாவித்து	வழங்கப்பட்டது	பொருட்படுத்தவில்லை

பொருள் விளக்கம்

அமரர் - தேவர். வானவூர்தி - ஆகாய விமானம். ஞானி - அறிவாளி.

தெரிந்துகொள்

செல்வம் × வறுமை. ஞானி × அஞ்ஞானி.

பகல் + கனவு = பகற்கனவு. கட்டு + காவல் = கட்டுக் காவல்.

வினாக்கள்

1. நமது தேசீய கீதத்தைப் பாடியவர் யார்?
2. இரவீந்திரருக்கு நோபல் பரிசு எதற்காக வழங்கப் பட்டது?
3. பல்லக்கில் அமர்ந்து இரவீந்திரர் என்ன நினைப் பார்?
4. இரவீந்திரர் மரச் சிங்கத்தை என்ன செய்தார்?
5. இரவீந்திரர் உயிர்களிடத்தில் அன்புள்ளவர் என்று எவ்வாறு அறியலாம்?

பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது :—கற்பனை, துவக்கம், பிழை, கவிதை, தனிமை.
2. வனந்திரம், அமரவாழ்வு, அந்நியர், ஞானி, கட்டுக்காவல்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.
3. சேர்த்து எழுது :—பண்டை + காலம், மரம் + கத்தி, அணில் + பிள்ளை.

இலக்கணம்

4-ஆம் பத்தியிலுள்ள வேற்றுமை உருபுகளை வகைப் படுத்தி எழுது.



18. ஜாவாச் சிறுவன்

1. ஜாவாத் தீவில் மாலை நேரத்தில் ஒரு கிரா மத்திற்கு நாம் சென்றுல், மாசுமறுவற்ற வானத்தி லிருந்து கதிரவன் தன் செங்கிரணங்களை வீசிக் கொண்டிருப்பதைக் காணலாம். ஒவ்வொரு வீட்டி லிருந்தும் சிறுவர்களும் சிறுமிகளும் வெளிவந்து கிராமத்தை அடுத்துள்ள புல்வெளியில் கூடுவார்கள். இருபத்தைந்து பேர் சேர்ந்து ஒரு ஆட்டத்திற்கு ஆயத்தம்செய்வர். அதன் பெயர் "புலி ஆட்டம்." இரு வர் புலிகளாகவும், இருபத்துமூவர் எருமைகளாகவும் பாவித்து விளையாடுவார்கள். புலிகள் எருமைகளைத் தாக்குவதாகப் பாவித்து விளையாட்டு தொடங்கும்.

2. வயது வந்த பெண்கள் வீடுகளிலேயே இருப் பார்கள். அவர்களுடைய முக்கியமான வேலை துணி நெய்வது. ஜாவா மக்கள் யாவரும் ஸராங் என்ற துணிவகைகளை உடுத்துவார்கள்; ஆண் பெண் என்ற பேதம் இல்லாமல் அவ்வாடைகளைத் தரிப்பார்கள். அவற்றைப் பெண்கள் ஒவ்வொரு வீட்டிலும் நெய் வார்கள். தரியின் டாக்—டாக் என்ற சப்தம் இடை விடாது கேட்கும்.

3. சற்று வயதுமுதிர்ந்த பெண்கள், நெய்த

துணிகளுக்குச் சாயம் கட்டுவார்கள். சாயம் தேவை யில்லாத இடங்களில் காட்டு மரங்களிலிருந்து கிடைக் கும் ஒருவகை மெழுகை மெல்லியதாகப் பூசுவார்கள்; அப்பொழுது சாயம் அந்த இடங்களில் ஒட்டாது. பலவகையான கோலங்களில் சாயம் கட்டுவார்கள். மேல்நாடுகளில் இவ்வகை ஆடைகள் பெரிதும் மதிக்கப்படுகின்றன.

4. ஜாவா மக்களின் வீடுகள் சற்று உயரமான மேடைகளின்மேல் கட்டப்படுகின்றன. கீழே அவர்கள் வளர்க்கும் கோழிகளும் வாத்துக்களும் ஆடுகளும் இருக்கும். வீடுகளின் கூரைகள் ஓலைகளால் வேயப் பட்டவை. வீட்டுக் கூரைகளில் பல்லிகளும் எறும்பு களும் மிகுந்த அளவில் வாசம் செய்யும். சுவர்கள் மூங்கில் பத்தைகளால் ஆனவை; அவற்றின்மேல் களிமண் பூசப்பட்டிருக்கும். வீடுகளில் செல்லெறும் புகள் அதிகம். வீடுகளில் உள்ள ஆடைகளையும் புத்த கங்களையும் அவை அரித்துவிடும்.

5. கிராமங்களுக்கு அருகில் உள்ள காடுகளில் புலிகள் அதிகம்; அவை ஜனங்களைக் கொன்று தின் னும். அவைகளைச் சூலத்தாலும் கட்டாரியாலும் பல நாட்கள் வேட்டையாடிக் கொல்வார்கள். அங்கு ஓடும் நதிகளில் முதலைகள் அதிகம். ஒரு மூங்கிலைப் பிளந்து அதை மெல்லியதாக்கி, அதன் ஒரு முனையைக் கூர்மையாகச் செய்வார்கள். பின்பு அதை ஒரு சுருள் கம்பிபோல் சுற்றி, இறந்துபோன ஒரு காட்டுக் கோழியின் உடலுக்குள் வைத்து மூடி, அதை நதியி னுள் வீசி எறிவார்கள். முதலை உடனே அதை ஆவ லுடன் விழுங்கும்; தின்ற பின்பு, மூங்கிற் சுருள் நீண்டு, உடலைக் குத்தத் தொடங்கும். அதன் பயனாக முதலை இறந்துவிடும்.

6. ஜாவா மக்கள் எருமைப் பந்தயங்களில் விருப்பம் அதிகம் உள்ளவர்கள். நகரங்களுக்கு வெளியிலுள்ள மைதானங்களில் பந்தயம் நடக்கும். எப்பொழுதும் மெதுவாக ஊர்ந்து செல்லும் எருமைகள் பந்தயங்களில் வேகமாகப் போவது ஆச்சரியமாக இருக்கும். மக்கள் பலவர்ண ஆடைகள் அணிந்து, திருவிழாவிற்குச் செல்வதுபோல் பந்தயக் காட்சிக்குச் செல்வார்கள். பிரபுக்களும் செல்வச் சீமான்களும் விலையுயர்ந்த ஆடைகளில் காட்சியளிப்பார்கள்.

7. பந்தய எருமைகள் பலவர்ண ஆடைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்; கழுத்தில் சுடர் வீசும் வெண்ணிற மணிகள் கட்டப்பட்டிருக்கும்; கொம்புகள் தோல் உறைகளால் மூடப்பட்டிருக்கும்; இரண்டிரண்டாக நுகத்தடியால் அவை பூட்டப்பட்டிருக்கும். எருமைகளின் உரிமையாளர்கள் பல வகை சப்தங்கள் செய்து தத்தம் எருமைகளைப் பந்தய இடத்திற்கு ஓட்டுவார்கள். பந்தயம் துவங்கினதும் வாலைத் தூக்கிக்கொண்டும், குளம்புகள் ஒலிக்கவும் எருமைகள் வேகமாக ஓடும். வெற்றிபெற்ற எருமை பல வாத்தியங்களுடன் ஊர்வலமாகத் தன் இருப்பிடம் திரும்பும்.

மாசுமறுவற்ற	தப்பை	சுடர்
பேதம்	ஆவல்	தத்தம்
மேடை	திருவிழா	இருப்பிடம்
சுருள்கம்பி	உரிமையாளர்	ஆயத்தம்
பிரபு	ஊர்வலம்	ஒட்டாது
நுகத்தடி	புல்வெளி	கட்டாரி
வாத்தியம்	மெழுக்கு	மைதானம்
கிரணம்	அரித்து	உரை
இடைவிடாது	விருப்பம்	ஒலிக்க

பொருள்-விளக்கம்

மாசுமறுவற்ற - களங்கமில்லாத. கிரணம் - கதிர். ஒலிக்க - சப்திக்க.

வினாக்கள்

1. ஜாவாச் சிறுவன் விளையாடும் விளையாட்டு என்ன ?

2. ஜாவாவில் பெண்கள் செய்யும் வேலை என்ன ?

3. சில இடங்களில் ஆடையில் சாயம் ஒட்டாதிருக்க என்ன செய்வார்கள் ?

4. ஜாவா மக்கள் முதலையை எவ்வாறு கொல்வார்கள்?

5. ஜாவாவில் எருமைப் பந்தயம் எப்படி இருக்கும் ?

பயிற்சி

1. பிரித்து எழுது: புல்வெளி, உரிமையாளர், இருப்பிடம், விலையுயர்ந்த, பந்தயக்காட்சி.

2. எதிர்ச்சொற்களை எழுது: பேதம், ஒட்டாது, இறப்பு, கேட்கும், உயர்ந்த.

3. நிர்மலம், இடைவிடாது, ஊர்வலம், இருப்பிடம், ஆயத்தம்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

இலக்கணம்

இரவீந்திரர் கவிதை எழுதினர்.

இரவீந்திரர்—பெயர்ச்சொல், உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கையிடம், முதல் வேற்றுமை, எழுதினர் என்ற பயனிலைக்கு எழுவாய்.

கவிதை—பெயர்ச்சொல், அஃறிணை, ஒன்றன்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இரண்டாம் வேற்றுமை, எழுதினர் என்ற பயனிலைக்குச் செயப்படுபொருள்.

எழுதினர்—வினைச்சொல், வினைமுற்று, உயர்திணை, ஆண்பால், ஒருமை எண், படர்க்கை இடம், இறந்தகாலம், இரவீந்திரர் என்ற எழுவாய்க்குப் பயனிலை.

பெயர்ச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை உண்டு. வினைச் சொற்களுக்குத் திணை, பால், எண், இடம், காலம் என்ற ஐந்தும் உண்டு.

பெயர்ச் சொல்லுக்குக் காலம் இல்லை; வினைச் சொல்லுக்கு உருபு இல்லை.

இதற்குச் சொல் இலக்கணம் என்பது பெயர்.

தடித்த எழுத்திய உள்ளவைகளுக்குச் சொல் இலக்கணம் கூறுக:

1. எருமை வேகமாக ஓடும்.
2. பிரபுக்கள் விலையுயர்ந்த ஆடைகளை அணிவார்கள்.
3. அண்ணி இரவீந்திரரைப் பரிகாசம் செய்தாள்.
4. அண்ணியிடம் மரப்பொம்மை இருந்தது.

19. நரி பரியானது

1. முன்னொரு காலத்தில் மதுரையை **அரிமர்த்தனன்** என்ற பாண்டிய மன்னன் ஆண்டுவந்தான். அவனிடத்தில் **வாதவூரர்** என்ற பெரியார் அமைச்சர் தலைவராக இருந்துவந்தார். வாதவூரர் கல்விகேள்விகளில் சிறந்தவர்; மதிநுட்பம் மிகுந்தவர். அரசகாரியங்களை அவர் திறமையுடன் செய்துவந்தார். அவர் சிறந்த சிவபக்தர்.

2. வாதவூரருக்கு **மாணிக்கவாசகர்** என்றும் **மணிவாசகர்** என்றும் பெயர்கள் உண்டு. மாணிக்க மணி போன்ற சிறந்த பக்திப் பாடல்களைப் பாடுபவர் என்பது அவற்றின் கருத்து. வாதவூரில் பிறந்தவர் ஆதலால், வாதவூரர் என்பது காரணப் பெயர்.

3. ஒருநாள் பாண்டியன் வாதவூரரை அழைத்து, "அமைச்சரே! துறைமுகத்தில் அந்நிய நாடுகளிலிருந்து சிறந்த பரிகள் விற்பனைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. நீர் அங்குச் சென்று நமக்கு வேண்டும் குதிரைகளை வாங்கி வருக" எனக் கட்டளையிட்டான். வாதவூரரும் அரசன் ஆணைக்கு இணங்க, பெருநிதியுடன் துறைமுகத்தை நோக்கிச் சென்றார். செல்லும் வழியில் திருப்பெருந்துறை என்ற தலத்தை அடைந்தார். அங்கே ஒரு மரத்தடியில் ஒரு பெரியார் சில சீடர்களுக்கு உபதேசம் செய்துகொண்டிருந்ததைக் கண்டார். சிவநேசச் செல்வரான வாதவூரர் அப் பெரியவரிடம் சென்று வணங்கித் தமக்குச் சிவபெருமானின் பெருமைகளையும், அவரைத் தாம் அறியும் வகையையும் உபதேசித்து அருளவேண்டும் எனக் கோரினர். அப் பெரியாரும் அவ்வாறே

உபதேசம் செய்தருளி மறைந்துவிட்டார். உண்மையில் சிவபிரானே அப் பெரியார் உருவில் இருந்தவர்.

4. உபதேசம் பெற்ற வாதவூரர் பல இனிய பாடல்களால் தமது பக்திப் பெருக்கை வெளிப்படுத்தினர். அப்பொழுது வானத்திலிருந்து அசரீரி, "பக்தா! உன் பாடலைக் கேட்டு மகிழ்ந்தோம். இன்று முதல் நீ **மணிவாசகன்** என்ற பெயருடன் விளங்குவாயாக" என்று கூறிற்று. மணிவாசகர் அரசனாணையை மறந்து, தாம் எடுத்துவந்திருந்த நிதியைத் தான தருமங்களிலும் கோயில் திருப்பணிகளிலும் செலவழித்தார்.

5. இச் செய்தியை மன்னன் கேள்வியுற்றான்; விரைவில் தலைநகரம் திரும்பும்படி ஆணை அனுப்பினான். வாதவூரர் சிவபெருமானை வணங்கித் தாம் அரசனுக்கு என்ன சொல்வது என்று ஏக்கம் கொண்டார். அப்பொழுது, "ஆவணி மாதம் மூல நட்சத்திர தினத்தில் குதிரைகள் மதுரைக்கு வரும் என உரைப்பாயாக" என்று ஒரு வாக்கு மணிவாசகருக்குக் கேட்டது. மணிவாசகர் மன்னனிடம் சென்று அவ்வாறே தெரிவித்தார். அரசன் நம்பாமல் அவரைச் சிறையில் அடைத்தான்.

6. சிறையில் மாணிக்கவாசகர் பல கொடுமைகளுக்கு ஆளானர். அப்பொழுது சிவபிரான் தம்முடைய பக்தரைக் காக்கத் திருவுள்ளம் கொண்டார்; கானகத்திலுள்ள நரிகளைத் திரட்டிப் பரிகளாக்கினர்; அப் பரிகள் சிறந்த சாதிக் குதிரைகளாக விளங்கின. சிவபிரான் குதிரைகளின் தலைவனாக உருக்கொண்டார்; ஆவணி மாதம் மூலநட்சத்திர தினத்தன்று குதிரைகளுடன் மன்னனை அடைந்தார். அரசன் களிப்படைந்தான்; மாணிக்கவாசகரைச் சிறையி

னின்றும் விடுதலை செய்தான்; குதிரைகளை லாயத்திற்கு ஓட்டுவித்தான்.

7. நள்ளிரவில் பரிகள் யாவும் மீண்டும் நரிகளாயின! அவை ஊளையிட்டுக்கொண்டு நகரெங்கும் ஓடத் தொடங்கின! லாயத்திலிருந்த மற்ற குதிரைகளையும் துன்புறுத்தின! காலையில் இச் செய்தியை அறிந்த அரசன், இது மணிவாசகர் செய்த சூது என எண்ணி, அவரை மீண்டும் சிறைசெய்தான். பின்பு சிவபெருமானின் அருளால் மன்னன் உண்மையை உணர்ந்தான்; மணிவாசகரைச் சிறையினின்றும் விடுவித்தான்; மீண்டும் அமைச்சராகப் பதவி ஏற்கும்படி கோரினன். ஆனல் மணிவாசகர் அப் பதவியை ஏற்கவில்லை; அவர் பல தலங்களுக்குச் சென்று சிவபெருமானின் பெருமையைப் பல பாக்களில் பாடினர்.

8. அவருடைய பாடல்கள் பக்தி நிறைந்தவை. அவைகளுக்குத் "திருவாசகப் பாடல்கள்" என்று பெயர். "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்னும் வாக்கு அப்பாடல்களின் சிறப்பைக் குறிக்கிறது.

கல்விகேள்வி	உபதேசம்	கொடுமை
துறைமுகம்	அசரீரி	சூது
தலம்	ஆளானர்	பக்தர்
பெருக்கு	ஊளை	நிதி
வாக்கு	நிர்வகித்து	உரு
லாயம்	கட்டளை	ஏக்கம்
மதிநுட்பம்	சிவநேசர்	உளம்
பரி	திருப்பணி	பாக்கள்

பொருள் விளக்கம்

தலம் - க்ஷேத்திரம். பரி - குதிரை. கட்டளை - உத்தரவு. நிதி - செல்வம். உரு - உருவம். திருப்பணி - கடவுளுக்கு ஊழியம். ஆளானர் - உட்பட்டார். லாயம் - குதிரைகளைக் கட்டும் இடம். சூது - வஞ்சனை. பாக்கள் - பாடல்கள்.

தெரிந்துகொள்

திரு+பணி — திருப்பணி. ஆள் + ஆனர் — ஆளானர்.

வினாக்கள்

1. வாதவூரருக்கு அரசன் கொடுத்த ஆணை யாது?

2. வாதவூரர் அரசனுடைய செல்வத்தை எதற்குச் செலவழித்தார்?

3. மன்னன் வாதவூரரை என்ன செய்தான்?

4. சிவபெருமான் வாதவூரருக்கு என்ன உதவி செய்தார்?

5. வாதவூரரை அரசன் ஏன் மீண்டும் சிறையில் அடைத்தான்?

6. திருவாசகத்தைப் பற்றிய வாக்கு என்ன?

பயிற்சி

1. உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது: தலம், பரி, திருப்பணி, சூது, உபதேசம், அசரீரி, கல்வி கேள்வி.

2. எதிர்ச்சொற்களை எழுது: பெருமை, விற்பனை, செலவு, நம்பிக்கை.

3. பிரித்து எழுது: மதிநுட்பம், அரசனணை, மரத்தடி, தலைநகரம், சாதிக்குதிரை.

இலக்கணம்

ஒருவர் பேசுவதைப் பேசியபடியே எழுதும்பொழுது, மேற்கோள் குறிகளை இட்டு எழுதுகிறோம். இக் குறிகளை நீக்கியும் எழுதலாம். (உ - ம்.) மன்னன் வாதவூரரைப் பார்த்து, "நீ நமக்குக் குதிரைகளை வாங்கி வருக" என்றான். மன்னன் வாதவூரரைப் பார்த்துத் தனக்குக் குதிரைகளை வாங்கி வரச் சொன்னான்.

பின் வருபவைகளில் மேற்கோள் குறிகளை நீக்கி எழுது :

1. சிவபிரான் மணிவாசகரைப் பார்த்து, "உனது பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தோம்" என்றார்.

2. மன்னன் வாதவூரரை நோக்கி, "மீண்டும் அமைச்சர் பதவி ஏற்று அருளுவீர்" என்றான்.

3. வாதவூரர் பெரியவரிடம் சென்று, "சிவபிரானைக் காணும் முறையை எனக்கு உபதேசம் செய்து அருளுக" எனக் கோரினார்.

20. மலர்கள்

மண்ணிலிருந்து பொருள் வரினும்—அதை
மாற்றி மணம்பெறச் செய்திடுவோம் ;
கண்ணுக் கினிய நிறங்களெல்லாம்—விண்ணில்
காணும் கதிரிடம் பெற்றிடுவோம். (1)

வண்டின் வரவெதிர் பார்த்து நிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசி நிற்போம் ;
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
உட்காரப் பீடமும் இட்டு வைப்போம். (2)

மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணம்செய்து வாழவைப் போம் ;
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம். (3)

ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம் ;
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டிநிற்போம். (4)

—கவிமணி

மணம்	பூசனை	ஈசன்
மங்கையர்	கதிர்	பொங்கும்
முடி	வாய்த்த	பீடம்
விண்	அடியவர்	ஏந்தும்
குமரர்	மது	இனிய

பொருள் விளக்கம்

மணம் - வாசனை. விண் - ஆகாயம். மது - தேன். பீடம் - உட்காரும் ஆசனம். பூசனை - பூசை.

தெரிந்துகொள்

மண் × விண்.

வினாக்கள்

1. மலர்கள் செய்யும் வேலைகள் யாவை ?
2. வண்டுகள் பூக்களை என்ன செய்கின்றன ?

பயிற்சி

1. மணம், கதிர், முடி, பிடி—இரு பொருள் கூறுக.
2. மலர்களைப் பற்றி நான்கு வாக்கியங்கள் எழுது.
3. மங்கையர், மணம், அடியவர், விண்—இச்சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

இலக்கணம்

பிழை நீக்கி எழுது :

பூங்காவிள் பலவிதமாந மலர்ச்செடிகல் உல்லன. மல்லிகைப்பூ வென்மை நிரம். தாளம்பூ மஞ்சல் நிரம். ரோஜாப்பூ சிவப்பு நிரம். கத்திறிப்பூ ஊதா நிரம். பூக்கல் கடவுளுக்குப் பூசை செய்ய உதவுகின்ரன.

21. விந்தை மனிதர்

1. நமது நாட்டில் நாக்கை நீட்டுவது விரும்பத் தகுந்த வழக்கம் அன்று. ஆனால் திபெத்து என்ற நாட்டில் நாக்கை நீட்டுவது மரியாதை என்று கருதப் படுகிறது. நாம் ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுது கைகளைக் குவித்து, "வணக்கம்" என்று சொல்லுகிறோம் அல்லவா? ஆனால் திபெத்தில் ஒரு வரையொருவர் சந்திக்கும் பொழுது முதலில் தொப்பி யைத் தலையிலிருந்து எடுப்பார்கள்; பின்பு நாக்கை வெளியே நீட்டுவார்கள்; கூடவே இடக்காதை முன் னால் இழுப்பார்கள்!

2. திபெத்து மக்களின் தேநீர்ப்பானமும் விநோதமானதே. அதை நீ விரும்ப மாட்டாய். தேநீருடன் சிறிது உப்பைப் போடுவார்கள்; சிறிது வெண்ணெயும் சேர்ப்பார்கள்! இந்தக் கலப்புப் பானத்தைச் சற்று நேரம் கடைவார்கள். மரக் கோப்பைகளில் இத் தேநீரை வார்த்து, மேலாக ரொட் டித் துண்டுகளைத் தூவுவார்கள்.

3. பிஜித் தீவில் ஓர் இனத்தார் தீயின்மேல் நடந்து செல்வார்கள்; தீ அவர்களுக்கு யாதொரு சேதமும் விளைவிப்பதில்லை. நமது நாட்டிலும் அம்மன் திருவிழாக்களில் சிலர் தீ மிதிப்பார்கள்; தீயின் வெப்பம் அவர்களை ஒன்றும் செய்வதில்லை. தரையில் ஆழமில்லாத ஒரு குழி வெட்டப்படும். அதில் விற கும் கற்களும் மாறி மாறி அடுக்கடுக்காக வைக்கப் படும். பின்பு விறகில் தீ மூட்டுவார்கள்; தீ பன்னி ரண்டு மணி நேரம் எரிந்து கொண்டிருக்கும். கொள்ளிக்கட்டைகளைப் பின்பு வெளியே எடுத்து விட்டுக் கம்புகளால் கற்களைச் சமன் செய்வார்கள்.

தீ மிதிப்பவர்கள் வரிசையாக இக் குழியைக் கடந்து செல்வார்கள்.

4. காங்கோ நாட்டு மக்கள் பதினைந்தாம் வயதில், தம்முடைய மேல் பற்களை அரத்தினால் ராவிக் கொள்வார்கள்! அந் நாட்டு மக்கள் கூர்மையான பல் வரிசையை அழகின் சின்னமாகக் கருதுகின்றனர். ஒரு சிறுவனுடைய பல் முதன்முதல் விழுந்தவுடன், உதய சூரியனை நோக்கி அவன் அதை வீசி எறிவான்; "சூரியனே!. எனக்குப் புதிய பல் கொண்டுவா" என்பான்! பின்பு மேற்குத் திசையைப் பார்த்து ஒரு கரித்துண்டை வீசுவான். "என் பல்லை எடுத்துக் கொள்; அது பழமையானது; எனக்கு இனி அது தேவையில்லை" என்பான்!

5. போர்னியோத் தீவில் மக்கள் பற்களில் துளைகளைச் செய்து, பித்தளைக் கம்பிகளால் நட்சத்திரங்களைப் போல் பண்ணி அத் துளைகளில் பொருத்திக் கொள்வார்கள். மூன்று வயது முடியும் வரையில் அங்கே குழந்தைகளுக்குப் பெயர் வைப்பதில்லை; பின்பு பாட்டனார் அல்லது பாட்டியார் பெயரை வைப்பார்கள். போர்னியோவில் பல இனத்தார் உண்டு. ஒரு இனத்தார் தமது பகைவர் வாழும் கிராமங்களின் பேரில் படையெடுத்தால், போரில் இறந்தவரின் சிரங்களை வெட்டி, நூறு பேர் செலுத்தும் ஓடத்தில் அவற்றை வைத்து, பாட்டுப்பாடிக் கொண்டே அதைச் செலுத்துவார்கள்; பின்பு அச் சிரங்களை உலர்த்தித் தோரணமாக வீடுகளில் கட்டுவார்கள்!

6. தென் அமெரிக்காவில் உள்ள ஆதிக்குடிகளில் ஒருவன் இறந்ததும், அவன் சடலத்துடன் உணவு, பானம், வில், அம்பு, அவனுடைய படகு முதலியவற்றைப் புதைப்பார்கள். பெண்கள் இறந்

தால், அவள் உபயோகித்து வந்த சட்டி பானைகள், கூடைகள், வீட்டுப் பாத்திரங்கள் முதலியவற்றை அவளுடைய சடலத்துடன் புதைப்பார்கள். இறந்த பின்பு இந்தப் பொருள்கள் யாவும் மேல் உலகத்தில் அவர்களுக்குத் தேவையாயிருக்கும் என்பது அவர்கள் கருத்து!

7. இவ்வாறு உலகில் உள்ள மக்கள் பல்வேறு பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டுள்ளனர். அவற்றைத் தொகுத்து ஏட்டில் எழுத இயலாது. ஓர் இனத்தாருடைய வழக்கம் பிற இனத்தாருக்கு விந்தையாக இருக்கும். ஆதலால் அவற்றை நாம் எள்ளி நகையாடலாகாது; சகிப்புத் தன்மையை நாம் வளர்க்க வேண்டும்.

விந்தை	ஏட்டில்	சின்னம்
பானம்	குவித்து	தோரணம்
கொள்ளி	சேதம்	எள்ளி
துளை	ராவி	தேநீர்
சடலம்	சிரம்	அடுக்கடுக்காக
தூவுவார்	தொகுத்து	உதயசூரியன்
சமன்	விநோதம்	ஆதிக்குடி
நட்சத்திரம்	விளைவிப்பது	சகிப்பு

பொருள் விளக்கம்

விந்தை - ஆச்சரியம். கொள்ளி - எரியும் கட்டை. சின்னம் - அடையாளம். சிரம் - தலை. சடலம் - உயிர் நீங்கிய உடல். எள்ளி - பரிகசித்து. சகிப்பு - பொறுமை.

தெரிந்துகொள்

அடுக்கு + அடுக்கு = அடுக்கடுக்கு. உதயம் + சூரியன் = உதய சூரியன். ஆதி + குடி = ஆதிக்குடி.

வினாக்கள்

1. திபெத்து நாட்டினர் ஒருவரையொருவர் சந்திக்கும்பொழுது என்ன செய்வார்கள்?

2. திபெத்தியர் தேநீர்ப் பானத்தை எவ்வாறு செய்வார்கள்?

3. பிஜிமக்கள் தீ மிதிப்பது எவ்வாறு?

4. காங்கோ மக்கள் பற்களை என்ன செய்து கொள்வர்?

5. போர்னியோ வாசிகள் பகைவர் சிரங்களை யாது செய்வர்?

6. தென் அமெரிக்காவில் இறந்தவரின் சடலத்துடன் எவற்றைப் புதைப்பார்கள்?

பயிற்சி

1. சந்திப்பு, தீ, வெப்பம், பகைவர், உலர்த்தி-எதிர்ச் சொற்களை எழுது.

2. மரியாதை, விநோதம், அடுக்கடுக்காக, தோரணம், பானம் - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. தேநீர்+பானம், மரம்+கோப்பை, உதயம்+சூரியன்—சேர்த்து எழுது.

இலக்கணம்

வீடு - கட்டு என்ற சொற்களைச் சேர்த்து, மூன்று காலங்களையும் குறிப்பிடும் வாக்கியங்களை அமைத்து எழுது.

22. உலகம் பலவிதம்

1. சீன மக்களின் நாகரிகம் பழமையானது. கிறிஸ்து பிறப்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்பே சீனருக்குத் திசையறிகருவி செய்யத் தெரியும்; காந்த ஊசியின் தன்மையும் தெரியும். சைனுவின் இலக்கியம் சிறந்தது. சீனக் குழந்தை ஏழாண்டு வரையில் கல்விச்சாலைக்குச் செல்ல மாட்டான். சீன மொழியில் இருபத்து நாலாயிரம் எழுத்துக்கள் உண்டு. ஒவ்வொரு எழுத்தையும் ஒரு சித்திரம் என்று சொல்லலாம். எழுதுவது அந்நாட்டில் ஒரு சித்திரக் கலையே; கருப்பு மையில் இறகு பேனுவினுல் அந்நாட்டினர் எழுதுவார்கள். போட்டிப் பரீட்சைகள் முதலில் ஆயிரம் ஆண்டுகட்குமுன் சைனுவில் தோற்றுவிக்கப்பட்டன; இப்பொழுதோ பல நாடுகளில் இவை நடத்தப்படுகின்றன. புதிய சைனுவில் பல கல்லூரிகளும் சர்வகலாசாலைகளும் உள்ளன. வெளி நாடுகளுக்கும் சீனர்கள் சென்று படித்துப் பட்டம் பெறுகின்றனர். இப்பொழுது பெண்களும் ஆண்களைப் போலவே படிக்கின்றனர்.

2. லாப்லாந்து ஒரு தனிப் பிரதேசம். அத் தேச மக்கள் நாடோடி வாழ்க்கை உள்ளவர்கள். குளிர்காலத்தில் தரைமீது பனிக்கட்டி படர்ந்திருக்கும்; அப்பொழுது கால்நடைகளுக்கு உணவுக்காக இடம்விட்டு இடம் மாறுவார்கள். பெரும்பாலும் அவர்கள் கூடாரங்களில் வசிப்பார்கள். இடத்தை அடிக்கடி மாற்றுவதால், லாப்புக் குழந்தைகள் தொடர்ச்சியாகப் பள்ளிக்கூடம் செல்வதில்லை; சில காலங்களில் கிராமப் பாடசாலைகளில் படிப்பார்கள். வாழ்க்கைத் தேவைகளைப் பெறுவதற்குக் கடினமான வேலைகளைச் செய்ய

வேண்டி யிருப்பதால், லாப்பு மக்கள் கல்வியில் அக்கறை எடுத்துக் கொள்வதில்லை.

3. இந்தியாவுக்கும் சைனுவுக்கும் இடையே கப்பல் மார்க்கத்தில் **தாய்லாந்து** என்றெரு நாடு உள்ளது. அதற்கு முன்பு **ஸயாம்** என்பது பெயர். தாய்லாந்தை "வெள்ளை யானை நாடு" என்று சொல்லுவர். முன்னெரு காலத்தில் ஸயாம் மன்னன் ஒருவனுக்கு ஓர் ஆவல் இருந்தது; வெள்ளை யானை ஒன்று தன்னிடத்தில் இருந்தால்தான் தன்னைப் பேரரசனுகக் கருதலாம் என அவன் நினைத்தான்; அவ்வகை யானையைப் பெறப் பல போர்களை நிகழ்த்தினுன். பகைவரிடமிருந்து வெள்ளை யானையைக் கைப்பற்றிய பொழுதெல்லாம் அதைக் குதூகலத்துடன் கொண்டாடினுன். இன்று ஸயாமின் தேசீயக் கொடியில் வெள்ளை யானையின் உருவம் உள்ளது.

4. ஸயாம் நாட்டுக் குழந்தைகளின் தலையைக் குழவிப் பருவத்திலேயே, சிறிது குடுமி விட்டுவிட்டு, மொட்டையடித்து விடுவார்கள். இந்தக் குடுமியை நன்கு பாதுகாப்பார்கள்; தினந்தோறும் அதற்கு எண்ணெய் இட்டு வாரிக் கொள்வார்கள். பன்னிரண்டாம் வயதில் குடுமியை எடுத்துவிட்டுத் தலையை மொட்டை அடித்துவிடுவார்கள். பள்ளிக்குச் செல்லும்பொழுது இடுப்பில் அவர்கள் வர்ணத்துண்டு தரிப்பார்கள். பள்ளிகளில் சிறு குழந்தைகள் தரையில் உட்கார்ந்து படிப்பார்கள். பெண்கள் சில ஆண்டுகளே பள்ளிக்குச் செல்வார்கள்; பள்ளியை விட்டு நீங்கியபின் பெற்றேருக்கு உதவியாக வயல்களிலும் வீடுகளிலும் வேலை செய்வார்கள்.

5. எஸ்கிமோக்கள் வாழும் பிரதேசம் பனி நிறைந்தது. ஆதலால் அங்கே பயிர்த்தொழில் அதிக

மாக நடைபெறுவதில்லை. வாழ்க்கைத் தேவைகளான உணவும் உடையும் அவர்களுக்கு மிகுந்த கஷ்டத்துடன் கிடைக்கின்றன. சிறுவரும் சிறுமியரும் பெற்றோருக்கு உதவி செய்வார்கள். வாழ்க்கை வசதியுள்ள சில இடங்களில்மட்டும் குழந்தைகள் பள்ளிகட்குச் சென்று படிக்கின்றனர்.

நாகரிகம்	சர்வகலாசாலை	பேரரசன்
சித்திரம்	கால்நடை	குழவி
கல்லூரி	மார்க்கம்	இலக்கியம்
நாடோடி	குதூகலம்	தோற்றுவிக்கப் பட்டன
அக்கரை	காந்தம்	பிரதேசம்
கைப்பற்றிய	பரீக்ஷை	தொடர்ச்சி
திசையறிகருவி	பட்டம்	நிகழ்த்தினான்
கலை	பெரும்பாலும்	குடுமி

பொருள் விளக்கம்

நாகரிகம் - ஒழுக்கம். கலை - சாத்திரம். மார்க்கம் - வழி. குதூகலம் - மகிழ்ச்சி. குழவி - குழந்தை.

வினாக்கள்

1. சீனமொழியில் உள்ள எழுத்துக்கள் எத்தனை ?

2. லாப்பு மக்கள் ஏன் கல்வியில் கருத்தைச் செலுத்துவதில்லை ?

3. ஸயாமின் தேசீயக் கொடியில் வெள்ளையானையின் சின்னம் ஏன் உள்ளது ?

4. எஸ்கிமோக்களிடையே கல்வி எவ்வாறு உள்ளது ?

பயிற்சி

1. நாகரிகம், பேரரசன், நிறைந்தது, வெளிநாடு—எதிர்ச்சொற்களை எழுது.

2. கீழ்வரும் வாக்கியங்களின் கருத்து சரியா, பிழையா என்று எழுது :

1. சீனர் சமீபகாலமாக நாகரிகம் பெற்றுள்ளனர்.
2. லாப்பு மக்கள் நாடோடி வாழ்க்கை உள்ளவர்கள்.
3. தாய்லாந்துக்கு "வெள்ளையானை நாடு" என்பது பெயர்.
4. ஸயாமியக் குழந்தைகள் தலையை மொட்டை அடித்துக் கொள்வார்கள்.
5. எஸ்கிமோ நாட்டில் பயிர்த்தொழில் அதிகம்.

இலக்கணம்

செயப்பாட்டு வினைகளைச் செய்வினைகளாக மாற்று :

1. பெண்களால் கூடாரம் அடிக்கப்பட்டது.
2. நாம் கடவுளால் காப்பாற்றப்படுகிறோம்.
3. இறந்தவன் அவன் சுற்றத்தாரால் புதைக்கப் பட்டான்.
4. போட்டிப் பரீட்சைகள் சீனரால் தோற்றுவிக்கப் பட்டன.



23. மூங்கில்

1. மூங்கில் நூறு அடிக்கும் மேலாக உயரமாக வளரும் ஒரு வகைக் கோரைப்புல்லின் இனத்தைச் சேர்ந்தது. அது கடினமானது; அதன் அடி மரம் பருமனுகவும் வட்டமாகவும் உள்ளது; அது பல வகைகளில் பயன்படக்கூடியது. மூங்கிலில் பல வகைகள் உண்டு. அதன் உயரம் இருபது அடி முதல் நூற்றிருபது அடி வரையில் இருக்கும். உலகின் கிழக்குப் பகுதியில் உஷ்ணமண்டலக் காடுகளில் மூங்கில் மிகுந்த அளவில் காணப்படும்.

2. மூங்கில், புல்லைப்போலவே நெருக்கமாக வளரும். ஒரு வேரிலிருந்து பல தண்டுகள் கிளம்பும்; தண்டுகள் உயர்ந்து வளர்ந்து நீண்டு இருக்கும்; மேல் பகுதியில் கிளைகள் உண்டாகும். மூங்கிலுக்கு

அடியிலிருந்து நுனிவரையில் பல கணுக்கள் இருக்கும். மூங்கிலின் உட்புறத்தில் ஒவ்வொரு கணுவிலும் ஒரு மூடி இருக்கும்; இந்த மூடிகள் இல்லாவிடில் மூங்கில் ஒரு குழாய் போல இருக்கும். மூங்கிலின் மேற்புறம் கடினமானது; அதை எளிதில் வெட்ட இயலாது. அதனுல் சைஞ தேசத்து மக்கள் மூங்கிலேச் சாணேக்கல்லுக்குப் பதிலாகப் பயன்படுத்துகிருர்கள்.

3. மூங்கில், வாழ்க்கையில் பலவகைகளில் உபயோகப்படுகிறது. விதைகளும் இளந்தண்டுகளும் உணவாகின்றன; முதிர்ந்த மூங்கில்கள் வீடுகட்டவும், மரச் சாமான்கள் செய்யவும், வண்டிகளும் விவசாயக் கருவிகளும் செய்யவும் பயன்படுகின்றன; பத்தைகள் சுவர்களே அமைக்கவும், பாய் முடையவும், கூடைகள் முடையவும் பயன்படுகின்றன. மூங்கிலேப் பிளந்து மெல்லிய இழைகளாகச் செய்து அவற்ருல் கயிறுகள் திரிப்பார்கள்.

4. மூங்கிலின் உட்புறம் குழாயாக இருப்பதால், கணுக்களிலுள்ள மறைவுகளே நீக்கிவிட்டுத் தண்ணீர்க்குழாய்களாகப் பயன்படுத்துகின்றனர். மேலும் பாலங்கள் அமைக்கவும், ஏணிகள் செய்யவும், வேலிகள் அமைக்கவும், தூண்டில் பிடிகளாகவும் மூங்கில் பயன்படுகின்றது. பறவைக் கூண்டுகள், காற்ருடிகள், குழந்தைகளுக்கான பொம்மைகள், கத்திகள் முதலியவைகளேச் செய்யவும் மூங்கில் பயன்படுகிறது. சாமான்களேத் தோளில் சுமந்து தூக்கிச் செல்லவும், அம்பு, வில் செய்யவும் மூங்கில் உபயோகமாகிறது.

5. சைஞவில் மூங்கிலால் காகிதம் செய்யப்படுகிறது. சில வகை மூங்கில்களில் ஆப்பிள் பழத்தைப் போன்ற சதைப்பற்று உள்ள பழம் உண்டாகிறது.

அப் பழத்தைச் சமைத்து உண்பதும் உண்டு. நமது நாட்டில் சில பகுதிகளில் விதைகளேயும் பழங்களேயும் தேனுடன் கலந்து, மூங்கில் பாத்திரங்களில் சமைத்துச் சாப்பிடுகின்றனர். இளந்தண்டுகளேச் சமைத்துச் சீனரும் ஜப்பானியரும் விரும்பிப் புசிக்கின்றனர்; இவற்றை ஊறுகாய்களாகவும் பயன்படுத்துவதுண்டு.

6. விலே மலிவான மேஜைகள், நாற்காலிகள், அலமாரிகள் முதலியவைகள் மூங்கிலால் செய்யப்படுகின்றன. கைத்தடிகள் செய்யவும் மூங்கில் பயன்படுகிறது. பிரம்பு என்பதும் ஒருவகை மூங்கிலேயாகும். பிரம்புச் சாமான்களே நாம் இக்காலத்தில் எங்கும் காணலாம்.

7. மூங்கிலில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் பூக்கும். சில வகைகளில் வருடந்தோறும் பூக்கள் மலரும்; சிலவற்றில் பல ஆண்டுகள் பூக்களேக் காண முடியாது. மூங்கில், மூன்று ஆண்டுகளேனும் வளர்ந்தால்தான் கடினத்தன்மை பெற்றுப் பல வேலேகளுக்குப் பயன்படும்.

8. நமது நாட்டில் மலேகளிலும் காடுகளிலும் மூங்கிலே ஏராளமாகக் காணலாம். மூங்கில்கள் காற்றினுல் தள்ளப்பட்டு ஒன்ருேடொன்று உராய்வதால் எளிதில் தீப்பிடித்துக் கொள்ளும்.

மூங்கில்	சாணேக்கல்	ஊறுகாய்
நெருக்கம்	திரிக்க	கடினத்தன்மை
குழாய்	பாத்திரம்	பெருமளவு
இழை	பிரம்பு	மூடி
சதைப்பற்று	உஷ்ணமண்டலம்	வாழ்க்கை
உராய்தல்	உட்புறம்	பிடி
பருமன்	விவசாயம்	அலமாரி
கிளம்பும்	மறைவு	ஏராளமாக

பொருள் விளக்கம்

இழை=நூல். ஏராளமாக=அதிகமாக. உராய்தல் - ஒன்றுடன் ஒன்று தேய்த்துக்கொள்ளுதல்.

தெரிந்துகொள்

உள்+புறம் - உட்புறம். சதை+பற்று - சதைப்பற்று. மறைவு×தோற்றம். கடினம்×மென்மை.

வினாக்கள்

1. மூங்கில் எங்கே அதிகமாகக் காணப்படும்?
2. மூங்கிலின் தோற்றம் எவ்வாறுள்ளது?
3. மூங்கில் எவ்வகைகளில் பயன்படுகிறது?
4. மூங்கிலைத் தண்ணீர்க் குழாயாக எவ்வாறு பயன் படுத்தலாம்?
5. மூங்கில் எவ்வாறு உணவாகப் பயன்படுகிறது?
6. மூங்கிற் காடுகளில் தீ எவ்வாறு உண்டாகும்?

பயிற்சி

1. கோரைப்புல், நூற்றிருபது, சாணைக்கல், தண்ணீர்க் குழாய், சதைப்பற்று - பிரித்து எழுது.

2. கொத்துக் கொத்தாக, பெருமளவு, சதைப்பற்று, நெருக்கம், உராய்தல் - இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3, மூங்கில் தன் கதையைச் சொல்வதுபோல் ஐந்து வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

(1) இராமன் ஓடினுன் (2) இராமன் வண்டி மாடுகளை ஓட்டினுன்.

(1) இதில் ஓடுதல் என்ற தொழிலைச் செய்தவன் இராமன். ஆதலால் ஓடினுன் என்பது தன்வினை எனப் படும்.

(2) இதில் இராமன் ஓடவில்லை. இராமன் மாடுகளை ஓடும்படி செய்தான். ஓடும் தொழிலைச் செய்தவை மாடுகள்; ஆதலால் ஓட்டினுன் என்பது பிறவினை.

(உ - ம்.) ஏறினுன், இறங்கினுன், ஆடினுன் - தன்வினை. ஏற்றினுன், இறக்கினுன், ஆட்டினுன் - பிறவினை.

கீழ்க்காணும் தன்வினைகளைப் பிறவினைகளாக மாற்று: புகுந்தான், நடந்தான், கிளம்பினுன், பணிந்தான்.

24. எங்கள் பாட்டி

'பாட்டி ! தலைவலி' என்று சொன்னேன் அவள்
பட்டென்று சுக்கை அரைத்துப் போட்டாள்.
கேட்ட வியாதிக்குக் கீரைகிழங்கு
கிராம்பு கடுக்காய் மருந்துரைப்பாள் ;
வீட்டில் எவருக்குக் காய்ச்சலா னாலும்
விடிவதற்குள் அவள் சொஸ்தம் செய்வாள்.
' நாட்டு மருந்துக்குப் புஸ்தகம் ஏதுக்கு ?
நான் சொல்லும் சரக்கினைக் கேட்டி 'டென்பாள்.(1)

மருத்துவம் சோதிடம் கதைசொல்வ தெல்லாமும்
வல்லவள் பாட்டி ; இவை மட்டோ !
பெருத்த கணக்கெல்லாம் கைவிரல் காட்டிப்
பிரித்துப் பொருத்தியே போட்டுக் கொள்வாள் ;
தெருத்திண்ணைச் சுவரிலே தயிர்க்காரி போட்ட
சிறுபொட்டு, பொய்யா நிசமா என்று
கருத்தில் நினைந்து கணக்குப்பார்த் துப் பின்பே
காசினைக் கையிற் கொடுத்திடுவாள். (2)

அரிய மனுஷிஇப் பாட்டியைப் போல்பவர்
அகப்பட மாட்டார்கள் ; கூடைபெட்டி
பெரிய நிறைசல்கள் கீற்று முடைவதில்
பேர்பெற் றவளெங்கள் பாட்டியம்மா.
புரியவில் லையவள் செய்கையெல் லாம்—சில
புள்ளிகள் போடுவாள் ;ஓர்கணத்தில்
அரியசித் திரங்கள் கோலப் பொடியினால்
அமைத்து விடுகிறாள்—ஆச்சரியம் !

—ஜோதி

பட்டென்று	அரிய	கிராம்பு
சொஸ்தம்	புள்ளி	வல்லவள்
பொட்டு	வியாதி	கீற்று
செய்கை	சோதிடம்	காய்ச்சல்
சரக்கு	மனுஷி	புரியவில்லை

பொருள் விளக்கம்

பட்டென்று - உடனே. கிராம்பு - இலவங்கப்பூ. சொஸ்தம் - சுகம்.

வினாக்கள்

1. பாட்டியின் மருந்து எப்படிப்பட்டது ?
2. பாட்டி கணக்குகளை எப்படிப் போடுவாள் ?
3. பாட்டி எதில் திறமை உள்ளவள் ?
4. பாட்டியின் வேலையில் அதிசயமானது எது ?

பயிற்சி

1. சோதிடம், ஆச்சரியம், கீற்று, சொஸ்தம், கணம்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. பாட்டியின் திறமையைப் பற்றி ஆறு வாக்கியங்கள் எழுது.

இலக்கணம்

இப் பாடலில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பெயர்களை எடுத்து எழுது.

25. அற்புத ஆட்சி

1. அல்லி என்பவள் ஒரு பெண்ணரசி. அவள் ஒரு பாண்டிய மன்னனுடைய மகள். பாண்டிய நாட்டை அவள் அரசுபுரிந்து வந்தாள். அவள் ஆட்சியில் அரசாங்க அலுவல்களைப் பார்த்துவந்தவர்கள் பெண்களே. அங்கே ஆண்களுக்கு அதிகாரம் இல்லை. படை வீரர்களும் பெண்களே. அவள் தன் அரசை நன்கு பரிபாலித்து வந்தாள்.

2. இயற்கையிலும் இதுபோன்ற பெண் அரசு ஒன்று உண்டு. இதற்கும் தலைவி ஒரு இராணியே; ஆனால் இந்த ராணி அதிகாரம் செய்வதில்லை. இந்த அரசிலும் பெண்களே எல்லா வேலைகளையும் செய்கின்றனர்; ஆட்சி செவ்வையாக நடைபெற்று வருகிறது. இந்தப் பெண்கள் வாழும் அரண்மனை பொன்னிறம் உள்ளது; அரண்மனை பல மாடிகள் உடையது; ஒவ்வொன்றிலும் அநேக அறைகள் உண்டு; அறைகள் அறுகோண உருவம் உள்ளவை. மேல்மாடியில்தான் நிதி சேமித்து வைக்கப்படும். பெண்கள் வெளியே சென்று அங்கங்கே கிடைக்கும் நிதிவகைகளை அவ்வறைகளில் சேகரம் செய்து வைப்பார்கள். அந்த நிதியை அரசி பயன்படுத்துவாள்; குழந்தைகளை உற்பத்தி செய்வாள்; பணிப் பெண்கள் அவற்றைப் பேணி வளர்ப்பார்கள்.

3. தேன்கூடுதான் அந்த அரசு. மரங்களிலும் மறைவான இடங்களிலும் தேனீக்கள் கூடு கட்டும். ஒரு தேனீ பறந்து சென்று பூக்களின்மேல் உட்காரும்; பூவிற்கு யாதொரு கெடுதியும் செய்யாமல் அதிலுள்ள மகரந்தப்பொடியைத் தேனீ எடுத்துச் செல்லும்; மற்றொரு தேனீ தேனை எடுத்துச் செல்

லும். மகரந்தத்தை மெழுகாகச் செய்து அவை கூட்டை அமைக்கும். கூட்டில் பல அடைகள் உண்டு. மேலே உள்ள அடைகளில் தேனீக்கள் தேனைச் சேமித்து வைக்கும்; கீழே உள்ள அடைகளில் அவை முட்டையிடும்.



4



3

6

4. தேனீக்களில் மூன்று வகை உண்டு. அவை இராணி ஈ, வேலைக்கார ஈ, சோம்பேறி ஈ என்பனவாம். இம் மூவகைகளில் சோம்பேறி ஈ ஆண் இனத்தைச் சேர்ந்தது; மற்றவை பெண்கள். இராணி ஈ ஒரு வேலையும் செய்யாது. ஒரு கூட்டில்ஓர் இராணி ஈத்தான் இருக்கும்; வேலைக்கார ஈக்கள் பல்லாயிரக் கணக்கில் இருக்கும்; சோம்பேறி ஈக்கள் குறைவாக இருக்கும்.

5. இராணிக்காக வேலைக்கார ஈக்கள் ஆயுள்

முழுவதும் உழைக்கும். கூடு கட்டுவது, தேனையும் மகரந்தத்தையும் சேகரிப்பது, இராணி ஈ இடும் முட்டைகளைப் பாதுகாப்பது, சிறிய தேனீக்களை வளர்ப்பது ஆகியவை வேலைக்கார ஈக்களின் வேலை. இயற்கையில் காணும் இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்தித் தேனீக்களை வீடுகளிலும் தோட்டங்களிலும் வளர்க்கிறார்கள். மரத்தினால் கூடு செய்து அதில் தேனடைகளை வைப்பார்கள்; அக்கூட்டில் ஓர் இராணி ஈயையும் சில வேலைக்கார ஈக்களையும் பிடித்து விடுவார்கள். அவை கூட்டில் சந்தோஷமாக வாழும். ஆண்டிற்கு இருமுறை நமக்குத் தேன் கிடைக்கும்.

6. தேன்கூடு வைத்துள்ள இடத்தில் தாவர வகைகள் இருக்கவேண்டும். ஈக்கள் கூட்டிலிருந்து ஒரு மைல் பரப்பிற்குள் சென்று தேனையும் மகரந்தத்தையும் எடுத்துக்கொண்டு வரும். இந்தப் பரப்பே தேனீக்களின் இராஜ்யம்; இராணி ஈ இதன் அரசி. அல்லியின் ஆட்சி பண்டை நாட்களில் இருந்ததாக அறிகிறோம்; ஆனால் இந்தத் தேனீக்களின் அற்புத ஆட்சி இன்று வரை நடந்து வருகிறது; இனியும் நடந்து வரும்.

அரசு	அமைக்கும்	சேமித்து
பரிபாலித்து	பாதுகாப்பது	மகரந்தம்
பொன்னிறம்	அலுவல்	பல்லாயிரம்
உற்பத்தி	தலைவி	தாவரம்
அடை	நிதி	படைவீரர்
உழைக்கும்	கெடுதி	செவ்வகையாக
அரசாங்கம்	இனம்	சேகரம்
இயற்கை	நிகழ்ச்சி	மெழுகு
அறுகோணம்	அதிகாரம்	ஆயுள்
பணிப்பெண்	ராஜ்யம்	பரப்பு

பொருள் விளக்கம்

அலுவல் - காரியம். பரிபாலித்து - நிர்வகித்து. செவ்வையாக - நன்ருக. சேமித்து - சேர்த்து.

தெரிந்துகொள்

இயற்கை × செயற்கை. பொன் + நிறம் = பொன்னிறம். பல + ஆயிரம் = பல்லாயிரம்.

வினுக்கள்

1. கதைகள் அல்லியைப் பற்றி என்ன சொல்லுகின்றன ?
2. இயற்கையில் பெண் அரசு எது ?
3. இராணி ஈயின் வேலை என்ன ?
4. வேலைக்கார ஈக்களின் வேலை என்ன ?
5. ஆண் ஈக்களின் வேலை யாது ?
6. தேனீக்களை எவ்வாறு வளர்க்கலாம் ?

பயிற்சி

1. எதிர்ச்சொற்களை எழுது :—அதிகாரம், தலைவி, சேமித்தல், உற்பத்தி, கெடுதி.

2. இயற்கை, பரிபாலித்து, பல்லாயிரம், பாதுகாத்தல், பொன்னிறம்—இச் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பிரித்து எழுது : தேன்கூடு, பாண்டியநாடு, படைவீரர், மகரந்தப்பொடி, தேனடை.

இலக்கணம்

1. அரசி, நகரம், தேனீ, பணிப்பெண், தோட்டம்—இவைகளுக்குப் பன்மைகள் யாவை ?

2. தடித்த எழுத்திலுள்ள சொற்களுக்கு இலக்கணம் கூறு :

1. அல்லி ஒரு பெண்ணரசி.
2. தேனீக்கள் மரங்களில் கூடு கட்டும்.
3. மக்கள் தேனீக்களை வீடுகளில் வளர்க்கிருர்கள்.



26. மிளகாய்

1. **மிளகாய்** நமது பாரத நாட்டுக்கு ஒரு புதிய பொருள். நமது பண்டை நூல்களில் மிளகாயைப் பற்றி ஒன்றுமே எழுதப்படவில்லை. மிளகாய் மிளகைப்போல் காரமாக இருப்பதாலும், காய்போல் இருப்பதாலும் இதனை 'மிளகுகாய்' என்றனர் போலும். இச்சொல்லே **மிளகாய்** என மருவிற்று. மிளகாய் தென் அமெரிக்காவிலுள்ள சிலி என்ற பிரதேசத்தி லிருந்து வந்தது; அதனுல் ஆங்கிலேயர் இதனை "சில்லிஸ்" என்று சொல்லுகின்றனர். நமது நாட்டுக்கு இதை முதன்முதலில் போர்த்துகீஸியர் கொண்டுவந்தனர்.

2. மிளகாயில் பலவகைகள் உண்டு: ஒரு நீளமான வகை ஆறு அங்குலம் வரை நீண்டு இருக்கும்; அரை அங்குலம் நீளமான வகையும் உண்டு. ஊசி மிளகாய் என்பது காரமாக இருக்கும்,

குடகு மிளகாய் காரம் அற்றது; அது உருண்டையாக இருக்கும். குடகு மிளகாயில் பெரியதும் சிறியது மான வகைகள் உண்டு.

3. மிளகாய் கத்தரி இனத்தைச் சேர்ந்தது. பயிர் செய்யக்கூடிய எந்த நிலத்திலும் மிளகாய் பயிராகும். நீர் தேங்கக்கூடிய நிலங்களில் மிளகாய் செழிப்பாக வளராது. கத்தரி போலவே மிளகாய்ச் செடியையும் நாற்றுவிட்டு நடவேண்டும். நல்ல எருக்கலந்த பாத்தி தயாரிக்கவேண்டும்; அதை ஈரமாக்கி அதில் விதைகளைத் தெளித்து, அவற்றின் மேல் மேலாக மணலைத் தூவ வேண்டும். பின்பு தண்ணீர் தெளிக்கவேண்டும். பாத்தியை வைக் கோலால் மூடிவைத்து ஒரு வார காலத்திற்குத் தண்ணீர் தெளித்து வரவேண்டும். பிறகு வைக்கோலை எடுத்து விட்டு, நாற்றுக்கு நாற்று நான்கு அங்குலம் இடைவெளி இருக்குமாறு மற்றச் செடிகளை எடுத்து விடவேண்டும். செடிகள் ஒரு சாண் உயரம் வளர்ந் ததும், அவற்றை எடுத்து வேறு இடங்களில் நடலாம்.

4. மிளகாய் பயிர்செய்யப்படும் நிலத்தை ஆழ மாக உழவேண்டும்; எருவைச் சேர்த்தபின் மீண்டும் உழவேண்டும். பாத்தியில் மேடுகளைச் செய்து, அவற்றில் இரண்டடிக்கு ஒன்றாக மிளகாய் நாற்றுக் களை நடவேண்டும்.

5. செடிகளுக்குத் தண்ணீர் அதிகம் விடக் கூடாது. பாத்திகளை அடிக்கடி கொத்திவிட வேண்டும். நாற்று நட்ட நான்கு மாதங்களில் பலன் உண்டாகும். பச்சைக் காய்களைப் பறித்து, நிழலில் காற்றோட்டம் உள்ள இடத்தில் இரண்டு நாட்கள் உலர்த்தினால் அவை சிறிதுசிறிதாகச் செந்நிறம் பெறும். பின்பு வெயிலில் காயவைத்தால் செந்நிறம் அதிகமாகும்.

காய்களைக் காம்புகளுடனேயே பறிக்கவேண்டும். உலர்ந்த மிளகாய்க்கு மிளகாய் வற்றல் என்று பெயர்.

6. மிளகாய் உணவிற்குச் சுவை அளிக்கிறது. அது மிகுதியாக உற்பத்தியாகிறது. ஆனால் மிள காய்க் காரத்தை அதிகமாக உண்ணக் கூடாது; உண்பதால் உடல்நிலை கெடும். சில நோய்களுக்கு மிளகாய்க் காரமே கூடாது எனச் சொல்லுவர்.

போலும்	கொத்தி	மிகுதி
தெளித்து	செந்நிறம்	உருண்டை
சாண்	அற்றது	தூவி
நிழல்	மணல்	காற்றோட்டம்
மருவிற்று	பலன்	உடல்நிலை

பொருள் விளக்கம்

மருவிற்று - மாறிற்று. அற்றது - இல்லாதது.

வினாக்கள்

1. மிளகாய் எங்கிருந்து, யாரால் நமது நாட்டுக்கு வந்தது ?
2. மிளகாய் வகைகள் என்னென்ன ?
3. மிளகாய்ச் செடியைப் பயிர்செய்வது எவ்வாறு ?
4. மிளகாய் வற்றல் செய்வது எப்படி ?
5. மிளகாயினால் என்ன பயன் ?
6. மிளகாய் என்று ஏன் பெயர் வந்தது ?

பயிற்சி

1. நிழல், மேலாக, உண்டை, மிகுதி, உயரம் - எதிர்ச் சொற்களை எழுது.

2. காற்றோட்டம், உற்பத்தி, அடிக்கடி, சிறிதுசிறி தாக - இவற்றை உன் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

3. பிரித்து எழுது: காற்றோட்டம், மிளகாய்ப் பயிர், பச்சைக்காய், உடல் நிலை, முதன்முதல்.

இலக்கணம்

முதல் பத்தியில் உள்ள வேற்றுமை உருபுகளை வகைப் படுத்தி எழுது.

27. தந்தையை மீட்ட தனயன்

(சிறு நாடகம்)

காட்சி 1.

இடம் : களமூரில் அரங்கநாதன் இல்லம்.

காலம்: மாலை நேரம்.

அரங்கநாதன், அவன் தாயார்.

[மாலையில் அரங்கநாதன் தெருவில் விளையாடி விட்டு வீட்டுக்கு வருகிறான். தாயார் துக்கப்படுவதைப் பார்க்கிறான்.]

அரங்கநாதன் :—அம்மா! ஏன் முகவாட்டம்?

[அன்னை வாய்திறக்கவில்லை. அரங்கநாதன் தாயின் கண்களில் நீர்த்துளிகளைப் பார்க்கிறான்.]

அரங்கநாதன் :—அன்னையே! ஏன் கவலைப் படுகிறீர்? தங்களுக்குத் தீங்கு செய்தது யார்? என்னிடம் கூறினால் தகுந்த பரிகாரம் தேடுவேன்.

தாயார் :—மகனே! நீ பன்னிரண்டு வயது சிறுவன். உன்னால் என்ன செய்ய முடியும்? என் மன வருத்தத்தை உன்னால் தீர்க்கமுடியாது. உன் வேலையைப் பார்.

அரங்கநாதன் :—அம்மா! அப்படிச் சொல்லாதீர்கள். என்மேல் வருத்தமா? அழுகையை நிறுத்துங்கள். என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள்.

தாயார் :—அப்பா! உன்னிடம் சொல்லி என்ன பயன்? நீயும் வருந்துவாய். அதனால்தான் சொல்லத் தயங்குகிறேன்.

அரங்க :—அம்மா ! துயரத்தின் காரணம் தெரிந்தாலன்றே அதை நீக்க வழி தேடமுடியும் ? ஆதலால் விவரம் சொல்லுங்கள்.

தாயார் :—அருமைக் குழந்தாய் ! நாளை உன் பாட்டனரின் மறைவு நாள். அன்று நாம் விரதம் இருந்து பெரியோர்களுக்கு விருந்து அளிக்கவேண்டும். ஆனல், உன் தகப்பனர் அதைச் செய்யவேண்டும். இன்றேல், ஊரார் நம்மைச் சமூகத்திலிருந்து விலக்கி விடுவார்கள்.

அரங்கநாதன் :—அம்மா ! அப்பா எங்கே ? இரண்டு நாட்களாய் அவரைக் காணவில்லையே !

தாயார் :—குழந்தாய் ! உன் அப்பா நிலங்களுக்குத் தீர்வை செலுத்தவில்லை. அதனல் தாசில்தார் அவரைக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்திருக்கிறர். சித்தூர் சிறையில் அவர் இருக்கிறர். அந்தணர் செய்யவேண்டிய கருமங்களில் திதி முக்கியமானது. ஐயோ ! நான் என்ன செய்வேன் ? (அழுகிறள்)

அரங்க :—அம்மா ! அழாதீர்கள். பயப்பட வேண்டாம். நான் இப்பொழுதே சித்தூர் செல்கிறேன். நாளை அதிகாலைக்குள் அப்பாவைக் கூட்டி வருகிறேன். தேவையான பண்டங்களைச் சித்தம் செய்து வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு விடை கொடுங்கள் ; ஆசிகூறுங்கள். கடவுள் எனக்குத் துணை செய்வார்.

தாயார் :—குழந்தாய் ! போய் வா ! உன்னை ஈசன் காப்பார்.

(அரங்கநாதன் போகிருன்.)

காட்சி 2.

இடம் : சித்தூரில் கலெக்டர் வீடு.

காலம் : விடியற்காலே.

[அரங்கநாதன், சேவகன், கலெக்டர் காஸாமேஜர். அரங்கநாதன் வழி நடந்தகளேப்புடன் வருகிருன்.]

அரங்க :—(சேவகனே நோக்கி) அப்பா ! நான் துரையைப் பார்க்கவேண்டும். தயவுசெய்து உள்ளே விடு.

சேவகன் :—போடா ! போ! பார்க்கமுடியாது, ஆபீசிற்குச் சென்று பார்.

அரங்க :—ஐயா ! என் வேலே அவசரமானது. உடனே துரையைக் காணவேண்டும்.

[கலெக்டர் சிறுவன் பேச்சைக் கேட்டுக்கொண்டே வருகிருர்.]

கலெக்டர் :—யாரது ? என்ன பேச்சு ?

சேவகன் :—ஐயா ! யாரோ ஒரு சிறுவன் தங்களேக் காண வந்துள்ளான்.

கலெக்டர் :—உள்ளே விடு.

[அரங்கநாதன் உள்ளே வருகிருன்.]

அரங்க :—ஐயா ! வணக்கம்.

கலெக்டர் :—குழந்தாய் ! நீ யார் ? உனக்கு என்ன வேண்டும் ?

அரங்க :—ஐயா ! என் தந்தை தீர்வை செலுத் தாததால் இவ்வூர்ச் சிறையில் வாடுகிருர். நாளேக்கு என் பாட்டனுரின் திதி. என் தகப்பனுர் அந்தக் கரு மத்தைச் செய்யவேண்டும். தயவு செய்து அவரை விடுதலே செய்யக் கோருகிறேன்.

கலெக்டர் :—அது எப்படி முடியும்? அவருக் குப் பதிலாகச் சிறையில் இருப்பது யார் ?

அரங்க :—நான் இருக்கிறேன். நாளைக்குத் திதி முடிந்த பிறகு அவர் வருவார்.

கலெக்டர் :—(தனக்குள்) ஆகா! இச் சிறுவன் தன் தந்தைபால் கொண்டுள்ள அன்புதான் என்ன? இவன் அவருக்குப் பிணையாகச் சிறையில் இருக்கிருனே! என்ன அடக்கம்! இவனுடைய களைபொருந்திய முகம் என்னைப் பரவசப்படுத்துகிறதே! சரி, இவன் தந்தையை விடுதலை செய்கிறேன்.

(அரங்கநாதனை நோக்கி) குழந்தாய்! உன் தந்தையை விடுதலை செய்கிறேன். நீயும் அவருடன் ஊருக்குப் போ. விரைவில் வரிப்பணத்தைச் செலுத்தி விடுங்கள்.

(விடுதலை செய்ய உத்தரவிடுகிருர்.)

அரங்க :—ஐயா! வணக்கம். தங்களுக்கு எனது நன்றி. (போகிருன்)

[அரங்கநாதனும் அவன் தந்தையும் களமூர் சேருகின்றனர். தாயார் மகிழ்வடைகிருள்.]

வாட்டம்	ஆசி	அருமை
தீர்க்க	திதி	தீர்வை
விரதம்	நன்றி	கருமம்
தாசில்தார்	கவலை	ஈசன்
விடை	விவரம்	பரிகாரம்
பரவசம்	விளக்கு	மறைவு நாள்
நீர்த்துளி	அந்தணர்	நிலம்
தயங்கு	துணை	சித்தம்
சமூகம்	பிணை	துரை
சிறை	தீங்கு	களை

பொருள் விளக்கம்

கவலை - விசனம். தயங்கு - நிதானி. ஆசி - வாழ்த்து. பரவசம் - சந்தோஷம். இல்லம் -வீடு.

தெரிந்துகொள்

தீங்கு × நன்மை. விடை × கேள்வி.

வினுக்கள்

1. அரங்கநாதன் தந்தை ஏன் சிறைப்பட்டார் ?

2. அரங்நாதன் கலெக்டரிடம் ஏன் சென்ருன் ?

3. அரங்கநாதன் தந்தையை எவ்வாறு மீட்டான் ?

4. கலெக்டர் தந்தையை விடுவிக்கும்பொழுது சொன்னது என்ன ?

பயிற்சி

1. இந்தக் காட்சிகளைக் கதையாக எழுது.

2. கலெக்டரைக் கண்டு தந்தையை மீட்டதை, அரங்கநாதன் தன் தாயாரிடம் சொல்வது போல் எழுது.

3. முடியாது, விலக்குதல், பயம், வருத்தம்—எதிர்ச் சொற்களை எழுது.

28. வீரத்துறவி

ஆண்மை உருக்கொண்ட அந்தணன்—எங்கள்
அண்ணல் விவேகா னந்தனின்
மாண்பை அளந்திட எண்ணிஞல்—இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம். (1)
வீரத் துறவறம் நாட்டிஞன்—திண்ணை
வீணர்வே தாந்தத்தை ஓட்டிஞன் ;
தீரச்செ யல்களை நாடிஞன்—இந்தத்
தேசநிலை கண்டு வாடிஞன். (2)
'உலகை வெறுத்துத் துறந்தவர்—தெய்வ
உள்ளக் கருத்தை மறந்தவர்
கலக நடுவிலும் தங்குவேன்' என்று
கர்ஜனை செய்திட்ட சிங்கமாம். (3)
பெண்ணின் பெருமையைப் போற்றிஞன்—ஆண்கள்
பேடித் தனங்களைத் தூற்றிஞன் ;
மண்ணின் சுகங்களை விட்டவன்—ஏழை
மக்களுக் காய்க்கண்ணீர் கொட்டிஞன். (4)
ஏழையின் துன்பங்கள் போக்கவும்—அவற்கு
எண்ணும் எழுத்தறி வாக்கவும் ;
ஊழியம் செய்வது ஒன்றுதான்—தேவை
உண்மைத் துறவறம் என்றுளான். (5)
தேசத் திருப்பணி ஒன்றையே—உண்மை
தெய்வத் திருப்பணி என்றவன் ;
மோசத் துறவுகள் போக்கிஞன்—பல
மூடப் பழக்கத்தைத் தாக்கிஞன். (6)
அடிமை மனதை அகற்றிஞன்—உயர்
அன்பின் உறுதி புகட்டிஞன்
கொடுமை அகற்றிட முந்திடும்—தவக்
கூட்டத்தை நாட்டுக்குத் தந்தவன். (7)

ஐம்பது ஆண்டுகள் முன்னமே—செல்வ
அமெரிக்கச் சிக்காகோ தன்னிலே
நம்பெரும் இந்திய நாட்டவர்—கண்ட
ஞானப் பெருமையைக் காட்டினுன். (8)

வெள்ளேயர் பாதிரி மாரெல்லாம்—கேட்டு
வெட்கித் தலேகுனிந்தார்களே !
தெள்ளிய ஞானத்தைப் போதித்தான்—அவர்
திடுக்கிட உண்மைகள் சாதித்தான். (9)

சத்திய வாழ்க்கையைப் பேசினுன்—அருள்
சாந்தத் தவக்கனல் வீசினுன் ;
யுத்தக் கொடுமையைச் சிந்திப்போம்—அந்த
உத்தமன் சொன்னதை வந்திப்போம். (10)

—நாமக்கல் கவிஞர்

பொருள் விளக்கம்

ஆண்மை - தைரியம்; அண்ணல் - பெரியோன். மர்மம் - இரகசியம். பேடித்தனம் - ஆண்மையற்ற செயல். ஊழியம் - தொண்டு.

விஞக்கள்

1. விவேகானந்தரின் உருவம் எப்படிப்பட்டது என்று கவிஞர் கூறுகிருர் ?
2. விவேகானந்தர் செய்த தொண்டுகள் யாவை ?
3. எது உண்மைத் துறவறம் ?
4. விவேகானந்தரின் தவக்கூட்டம் எத்தன்மையது ?
5. அமெரிக்கா நாட்டில் விவேகானந்தர் செய்த தொண்டுகள் என்ன ?

பயிற்சி

1. இப்பாடல்களே அபிநயத்துடன் பாடு.
2. இப்பாடல்களின் கருத்தைச் சுருக்கமாக எழுது.
3. சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகளே இப் பாடல்களிலிருந்து தொகுத்து எழுது.

29. செய்யுள் பகுதி

1. மூதுரை

(பயனை எதிர்பாராதே)

நன்றி ஒருவருக்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால். (1)

நல்லாருக்குச் செய்யும் உபகாரம்

நல்லார் ஒருவருக்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர். (2)

கருமம், காலம் வந்தால் முடியும்

அடுத்து முயன்றாலும் ஆகுநாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா. (3)

குலத்தளவே யாகும் குணம்

நீரளவே ஆகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு—மேலைத்
தவத்தளவே ஆகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே ஆகும் குணம். (4)

நல்லாரால் உலகம் தழைக்கும்

நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை. (5)

திறமை அறிந்து கருமம் செய்

பண்டு முளைப்பது அரிசியே ஆனலும்
விண்டுமி போனல் முளையாதாம்—கொண்டபேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி
ஏற்ற கருமம் செயல். (6)

மூடன் கற்ற கல்வி

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்—தானும்தன்
பொல்லாச் சிறகை விரித் தாடினற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (7)

நல்லுறவின் தன்மை

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. (8)

கபடம் அற்றவர் தன்மை

நஞ்சுடைமை தான்அறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (9)

கற்ருேர் சிறப்பு

மன்னனும் மாசறக் கற்ருேனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்ருேன் சிறப்புடையன்—மன்னனுக்குக்
தன்தேசம் அல்லாற் சிறப்பில்லை கற்ருேர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு. (10)

—ஔவையார்

பொருள் விளக்கம்

(1) தெங்கு - தென்னே. நின்று தளரா - நீண்டு உயர்ந்து தளர்ச்சியின்றி. தாள் - பாதம். (வேர்) (2) ஈரமிலா - அன்பில்லாத. (3) அடுத்து - அடிக்கடி. பழா - பழுக்கமாட்டா. (4) மேலைத்தவம் - முன் பிறப்பில் செய்த தவம். (5) பொசியும் - கசிந்து ஊறும். தொல் உலகு - பழமையான உலகம். (6) ஆற்றல் - திறமை. (7) பொல்லா - அழகில்லாத. (8) உற்றுழி - துன்பம் நேர்ந்த சமயத்தில். தீர்வார் - விலகுபவர். உறுவார் - பொருந்துகிறவர். (9) கரவு - ஒளித்தல். (10) மாசு - குற்றம். அற - நீங்க.

2. நீதி வெண்பா

மூதறிஞரின் சிறப்பு

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே—வெற்றிபெ
வெண்கலத்தின் ஓசை மிகுமே விரிபசும்பொன் [றும்
ஒண்கலத்தில் உண்டோ ஒலி? (1)

கல்லார் தன்மை

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழினும் நூல்
வல்லான் ஒருவனேயே மானுவரோ?—அல்லாரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா ஆமோ? விளம்பு. (2)

இன்சொல் விரும்பு

மென்மதுர வாக்கால் விரும்பும் சகம்கடின
வன்மொழியி னுல்இகழும் மண்ணுலகம்—நன்மொழி
ஓதுகுயில் ஏதங் குதவியது? கர்த்தபந்தான் [யை
ஏது அபராதம் செய்த(து) இன்று? (3)

தீயோரை நாடாதே

கொம்புளதற்(கு) ஐந்துமுழம் குதிரைக்குப் பத்து [முழம்
வெம்புகரிக்(கு) ஆயிரம்தான் வேண் டுமே—வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்தில்
நீங்குவதே நல்லோர் நெறி. (4)

மக்கள் தன்மை

உத்தமர்தாம் ஈயுமிடத்(து) ஓங்குபனை போல்வாரே
மத்திமர்தாம் தெங்குதனை மானுவரே—முத்தலரும்
ஆங்கமுகு போல்வர் அதமர் அவர்களே
தேங்கதலி யும்போல்வர் தேர்ந்து. (5)

—ஔவையார்

பொருள் விளக்கம்

(1) சிற்றுணர்வோர் - அற்ப புத்தி உடையவர். சிலு சிலுப்பர் - படபடத்துப் பேசுவர். முற்றுணர்வோர் - மிகுந்த அறிவு உடையவர். விரி - ஒளி மிகுந்த. ஒண்கலம் - பிரகாசம் பொருந்திய பாத்திரம். (2) காதலித்து - விரும்பி. மானுவரோ - ஒப்பாவாரோ. அல்ஆரும் - இரவில் பொருந்திய. இலகிடினும் - விளங் கினும். (3) மதுரம் - இனிமை. சகம் - உலகம். கர்த்தபம் - கழுதை. அபராதம் - தீங்கு (4) வெம்பு - கோபிக்கின்ற. வம்பு - தீச்செயல்.

3. நன்னெறி

சிறந்த குணம்

உள்ளம் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ ? தடம்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ ? விளம்பு. (1)

மூதறிஞரின் இயல்பு

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளக்
கனிவினும் நல்கார் கயவர்—நனிவிளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்(து)
ஆயினும் ஆமோ ? அறை. (2)

(மேன்மக்கள் விருப்பம்)

கற்ற அறிவினரைக் காமுறுவர் மேன்மக்கள்
மற்றையர்தாம் என்றும் மதியாரே—வெற்றி நெடும்
வேல்வேண்டும் வாள்விழியாய் ! வேண்டா புளிங்காடி
பால் வேண்டும் வாழைப்பழம். (3)

(குணம் உள்ளோர் குற்றம்)

உண்டு குணம் இங்(கு) ஒருவர்க்(கு) எனினும் கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும் பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்பும் கனி ! (4)

(நல்லாரிடம் நட்பு)

நல்லார் செயுங்கேண்மை நாள்தோறும் நன்றாகும்
அல்லார் செயுங்கேண்மை ஆகாதே—நல்லாய் ! கேள்
காய்முற்றில் தின்தீம் கனியாம் இளந்தளிர்நாள்
போய் முற்றின் என்னாகிப்போம் ? (5)

—சிவப்பிரகாசர்.

பொருள் விளக்கம்

(1) கவர்ந்து - தன்வசப்படுத்தி. தடம் - பெரிய. (2) முனிவினும் - கோபித்தாலும். கயவர் - தீயோர். நனி - மிக. கதலி - வாழை. அறை - சொல். (4) கீழ் கொண்டு புகல்வது - கீழோர் எடுத்துப் பேசுவது. மலர்ச்சேக்கை - பூவாகிய மெத்தை. செழும்பொழில் - செழிப்பான சோலே. (5) கேண்மை - நட்பு. தீம் கனி - இனிய பழம்.

4. தனிப் பாடல்கள்

1. மெய்யும் பொய்யும்

மெய்யதைச் சொல்வாராகில்
விளங்கிடும் மேலாம் நன்மை ;
வையகம் அவரைக் கொள்ளும் ;
மனிதரில் தேவ ராவர் ;
பொய்யதைச் சொல்வாராகில்
போசனம் அற்பமாகும் ;
நொய்யவர் இவர்கள் என்று
நோக்கிடார் அறிவுளாரே.

—விவேகசிந்தாமணி

வையகம் - பூமியில் உள்ளோர். நொய்யவர் - அற்பர். நோக்கிடார் - லட்சியம் செய்யமாட்டார்.

2. துன்பம் யாவர்க்கும் ஒன்றே

பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பார்க்கும்
பருக்கை அற்ற
கூழுக்குப் போட உப்பில்லை என்பார்க்கும்
குற்றித் தைத்த
காலுக்குத் தோற்செருப் பில்லை என்பார்க்கும்
கனகதண்டி
மேலுக்குப் பஞ்சணை இல்லைஎன் பார்க்கும்
விதனம் ஒன்றே.

கனகம் - பொன். தண்டி - பல்லக்கு.

3. காந்தி வாழ்க!

வாழ்க நீ எம்மான்! இந்த
வையத்து நாட்டில் எல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசம் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா நீ வாழ்க! வாழ்க!

—பாரதியார்

எம்மான் - எமது பெரியோய். தாழ்வுற்று - கீழ்நிலை யடைந்து.

4. வாழ்த்து

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !
வாழிய பாரத மணித் திருநாடு !
இன்றெமை வருத்தும் இன்னல்கள் மாய்க !
நன்மை வந்தெய்துக ! தீதெலாம் நலிக !
அறம் வளர்ந்திடுக ! மறம் மடிவுறுக !
ஆரிய நாட்டினர் ஆண்மையோ டியற்றும்
சீரிய முயற்சிகள் சிறந்துமிக் கோங்குக !
நந்தே யத்தினர் நாடொறும் உயர்க !
வந்தே மாதரம் ! வந்தே மாதரம் !

—பாரதியார்

சீரிய - உயர்வான.

RTR/135

PAPPA TAMIL VACHAKAM

BOOK V

BY

V. S. LEELA, B.A., B.T.

EDITOR.:

T. P. MEENAKSHISUNDARANAR, M.A., B.L., M.O.L.

ARUNA PUBLICATIONS LTD.,

2, VENKATRANGAM PILLAI ST.,

TRIPLICANE :: MADRAS

Copyright] 1952 [*Price As.* 12